உ

# அருள் ஒளி



நவராத்திரி சிறப்புமலர்

வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்


109

தெல்லிப்பழை, இலங்கை


2015


# கௌரவிப்பு விழா


எங்கள் தேவஸ்தானத்தின் பரம்பரை தர்மகர்த்தா சபையின் தலைவராக விளங்கும் கௌரவ திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றமை குறித்து எமது நிர்வாக சபையால் வரவேற்று நடைபெற்ற வைபவத்தின்போது....













உ



# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

புரட்டாதி மாத மலர்

2015

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

# இந்து சாதனப் பத்திரிகை
# தொடர்ந்து வெளிவரவேண்டும்

இந்து சாதனப் பத்திரிகை தொடர்ந்து வெளிவரவேண்டும். ஈழத்து இந்து மக்களின் உன்னத ஊடகமாக வெளிவந்த பத்திரிகை இந்து சாதனம் ஆகும். இப்பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் (Hinu Organ) வெளிவந்ததினால் கீழைத்தேயத்தவர்கள் மட்டுமன்றி மேலைத்தேயத்தவர்களும் இப்பத்திரிகையைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றனர். *1889ஆம்* ஆண்டு இப்பத்திரிகை சைவ பரிபாலன சபையினால் வெளியிடப்பட்டது.

*126* வயதுடைய இப்பத்திரிகை சென்ற ஆண்டு முதல் வெளிவராமல் இருப்பது மிகவும் வேதனை தருகிறது. ஆரம்பத்தில் திருவனந்தபுரம் பிரதம நீதியரசராக விளங்கிய பேரறிஞர். தா. செல்லப்பாபிள்ளை இப்பத்திரிகையின் முதலாவது ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

ஆறுமுகநாவலரின் பெறாமகன் நல்லூர். த. கைலாசபிள்ளை அவர்கள் நீண்ட காலம் இப்பத்திரிகையை வழிநடத்தியுள்ளார். புகழ்பூத்த அறிஞர்கள் திரு. பே. காத்திகேசப்பிள்ளை, திரு. S. சபாபதி, திரு. நம. சிவப்பிரகாசம் ஆகிய பெருமக்கள் நீண்ட காலமாக இப்பத்திரிகையின் ஆசிரியராக விளங்கி சிறப்புச் செய்தனர். சைவபரிபாலனசபை எம் மண்ணுக்கு ஆற்றிய தொண்டுகள் என்றும் நன்றிக்குரியது. ஈழத்து இந்து சமயத்தின் வரலாற்றினை ஆராய்பவர்கள் இந்து சாதனத்தை தவிர்த்து ஆராய முடியாது. இந்து

சாதனம் கிறிஸ்தவ மிஷனரிகள் செய்த போலிப் பிரசாரத்திற்கு முடிவு கட்டிய உன்னத சாதனமாக விளங்கியுள்ளது. நாவலர் பெருமானின் நீண்ட கனவை நனவாக்கிய இந்து சாதனம் தொடர்ந்து வெளிவரவேண்டும்.

சைவபரிபாலன சபையைச் சார்ந்த சான்றோர்கள் இவ் வரலாற்றுப் பத்திரிகையை வாழ வைக்க வேண்டும். அச்சு வசதிகள் குறைந்த காலத்தில் தொடர்ந்து வெளிவந்த இந்து சாதனம் நவீன வசதிகள் நிறைந்த இக்காலத்தில் அமைதி பெறுவது பொருந்தாது. சில ஆண்டுகளுக்கு முன்பு இந்து சாதனத்தின் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள் சிறப்பாக இந்து சாதனம் மீண்டும் எழுச்சிபெற உதவினார். பின் முதறிஞர். சிற்பி. சிவசரவணபவன் பிரதம ஆசிரியராக இருந்தவேளை தொடர்ந்து சில மாதம் இந்து சாதனம் சிறப்பாக வெளிவந்தது.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இந்து சாதனம் வெளிவரவில்லை. சைவமக்களின் சமயப் பிரசாரப் பத்திரிகையாகவும் வரலாற்றுத் தகவல் பத்திரிகையாகவும் இப்பத்திரிகை விளங்கி வந்தது. இப்பத்திரிகையின் பணிகளால் பல நல்ல காரியங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 19ஆம் 20ஆம் நூற்றாண்டில் எம்மண்ணில் ஏற்பட்ட சமய எழுச்சிக்கு அரணாக விளங்கிய இந்து சாதனத்தை மீண்டும் எழுச்சி பெறச் செய்வதற்கு சைவபரிபாலன சபையும் சைவசமய அபிமானிகளும் முன்வரவேண்டும்.

- ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

**தொடர்புகளுக்கு**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# மீள் எழுச்சி பெற்று 16-09-2015இல் குடமுழுக்கு கண்ட தெல்லிப்பழை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்

திரு.சு. ஏழூர்நாயகம் அவர்கள்



தெல்லிப்பழை புகையிரத நிலையத் திற்கு அண்மையில் அதன் வடகீழ்த் திசையில் தெல்லிப்பழை கட்டுவன் வீதி ஓரமாக அமைந்திருந்த இவ்வாலயம் போர் அனர்த்தங்களால் முற்றாகச் சிதைந்து போயிருந்தது கட்டிடம் மட்டுமல்லாது அம்பாள் தேரேறி வீதியுலா வந்த அழகிய சித்திரத் தேரும் பாதிப்புற்றிருந்தது.

இவ்வாலயத்தின் தற்போதைய ஆதீன கர்த்தா திருச் செந்திநாதசர்மா குகநாத சர்மா அவர்களின் தளரா முயற்சியாலும் இவ்வாலயத்தைச் சார்ந்த புலம்பெயர் அன்பர்களின் பேராதரவாலும் இவ்வாலயம் மீளப்புதுப்பிக்கப் பட்டு 16.09.2015 புதன்கிழமை மு.ப. 10.15-11.30 மணியளவிலான சுப முகூர்த்த வேளையில் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ சர்வேஸ் வரக் குருக்கள் (சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில்) அவர்களால் அம்பாளுக்கு குட முழுக்கு நிறைவேற்றப்பட்டு அம்பாள் அருள்மழை பொழிய எழுந்தருளியுள்ளாள்.

## ஆலய வரலாறு

ஆதியில் இலந்தை மரங்கள் நிறைந்த ஒரு தோப்பாக இந்த இடம் இருந்ததென்றும் நடுவே நின்றதொரு வில்வமர நிழலில் சூல மொன்று வைத்து வழிபாடாற்றப்பட்ட தென்றும் வாய்மொழி வழிவந்த செய்திகள் மூலம் அறியமுடிகின்றது. இந்த இடத்தில் வழி பாடு தொடங்கப்பட்ட ஆரம்பகாலம் பற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லை. சுமார் 200 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கொள்ளலாம்.

மேற்குப் புறமாக நின்ற வில்வமரத் தடியில் ஒரு சூலமும் மற்றொரு இலந்தை மரத்தடியில் கல்லும் வைத்து வழிபடப்பட்ட தென்றும் அச்சின்னங்கள் வயிரவரையும், அம்மனையும் குறிப்பன எனவும் ஆதியில் வட பத்திரகாளி அம்பாள் எனப் பெயர் வழங்கப்பட்டதென்றும் பின்னர் மகாமாரி அம்பாள் என்றும் தற்போது முத்துமாரி அம்பாள் ஆலயம் எனவும் பெயர் பெற்று விளங்குவதாகவும் தகவல் தந்த தெல்லியூர் செ. நடராசா அவர்கள் ஆதியில் கிழக்கு வாயில் ஆலயமாக இருந்து பின் மேற்கு வாயிலாக மாற்றம் பெற்றதெனவும் குறிப்பிடுகின்றார்.

இன்றைய ஆலயக் காட்சியின் காலம் 1981 என்று கிடைக்கும் செய்திகள் மூலம் உணர முடிகின்றது. இதற்கு முன்னரும் நான்கு முறை புனருத்தாரன வேலைகள் நடைபெற்றன. இறுதியாக நடைபெற்ற புனரமைப்பு வேலைகளின் பின் 1981 ஆனி உத்தர நட்சத்திரத்தில் கும்பாபிடேகம் நடைபெற் றுள்ளது. தெல்லிப்பழையைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவசாமி குருக்கள் கரகுக வரதக் குருக்கள் இந்தக் கும்பாபி டேகத்திற்கு தலைமைக் குருவாக அமர்ந்து எல்லோர் மனமும் நிறைவாகும் வண்ணம் நிறைவு செய்தார்.

தினமும் மூன்று காலப் பூசை நடை பெறும். இவ்வாலயத்தின் மகோற்சவம் பங்குனி உத்தரம் தீர்த்தோற்சவமாக அமையும் வகையில் பத்து நாட்கள் நடை பெறும். பங்குனி பூரம் தேர்த் திருவிழா தினமாகும்.

புதிதாக கருங்கல்லால் வடிவமைக்கப் பட்ட ஸ்ரீ முத்துமாரி அம்பாளை மூல மூர்த்தியாக கொண்ட இந்த ஆலயத்தில் ஏனைய கருங்கல்லால் புதிதாக பரிவார மூர்த்திகளாக விநாயகர், சுப்பிரமணியர், இலட்சுமி, பெருமாள், வயிரவர், சண்டேசு வரர் உள்ளன. இவர்கள் வீதிஉலா வரு வதற்கு உதவும் வகையில் சிங்கம், இடபம், குதிரை நாதம், யானை முதலியன இருந்தன. எனினும் அவற்றில் ஒன்று தானும் தற்போது இல்லை என ஆதீன காத்தா குகநாதசர்மா அவர்கள் கவலை யுடன் குறிப்பிடுகின்றார்.

சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், ஆவணி மூலம், நவராத்திரி, ஐப்பசி பௌர்ணமி, கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம் என்பன இந்த ஆலய விசேட விழாக் காலங்களாகும். சித்திரை பௌர்ணமி தினத்தன்று மாலை ஆறு மணிக்கு சுமங்கலிகள் கலந்து கொள்ளும் திருவிளக்குப் பூசையும், கௌரி நோன்பு அர்ச்சிப்பும் சிறப்பாக இங்கு நடைபெற்றன.

பஞ்சாட்சரக் குருக்கள், செல்லையாக் குருக்கள், நடராசாக் குருக்கள் அவரது மகனின் மகன் சிவகாமிக்குருக்கள், கரகுக வரதக் குருக்கள் (1971 – 1981) ஆனி தொடக்கமாக சதாசிவக்குருக்கள் திருச் செந்திநாத சர்மா என்போர் முறையே அர்ச்சகர்களாகப் பணி புரிந்த நிலையில் 1990இல் இடம்பெற்ற போர்ச் சூழல் காரண மாக மக்கள் இடம்பெயர்ந்ததுடன் ஆலயத்தின் செயற்பாடுகள் அற்றுப் போயின. தகவல் பிரம்மஸ்ரீ ச. திருச்செந்திநாதசர்மா தெல்லிப்பழை அச்சுவேலி தொடர்புடைய வேலுப்பிள்ளை என்பவரின் மகன் அன்னப்பிள்ளை ஊமை யாக இருந்தவர். அவருக்கு ஆறாவது வயது நடந்து கொண்டி ருக்கும் போது தந்தையார் வில்வமரத்தின் கீழ் இருந்த அம்பாளுக்கு கொட்டகை அமைக்க விரும்பி நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார். விளையாடிக்கொண் டிருந்த குழந்தை "அப்பா" என்று கூவி யதைக் கேட்டு தந்தையாரும் மற்றோரும் பேரானந்தம் அடைந்து அம்பாளின் அருட் கருணையை எண்ணியெண்ணி வியந்தனர்.

**கும்பாபிடேக தினத்திலன்று நிகழ்ந்த அதிசயம் – தகவல். திருமதி. பராசக்தி பரமேஸ்வரன்**

அந்தணர்கள் வேதம் ஓத, மங்கள வாத்தியம் முழங்க, பக்தர்களின் "அரோகரா" ஓசையுடன் கும்ப பிரதட்சணம் கோபுர வாயிலை அண்மித்த போது கோபுரத்தின் உச்சியில் சிவாச்சாரியார் களுள் கலசங்களுக்கு அபிடேகம் செய்த வேளை கருடன் ஆலயத்தை சுற்றிவந்து தரிசனம் தந்த காட்சி அங்கு நிறைந்திருந்த அடியார்களை மெய்சிலிர்க்க வைத்தது கருடபகவானே வந்து வாழ்த்தியது போல இந்நிகழ்வு அமைந்திருந்தது.

சேக்கிழார் பெருமான் மண்ணினில் பிறந்தார் பெறும் இரண்டு பயன் குறித்து பெரியபுராணத்தில் கூறுகின்றார் அவை யாவன. அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல் "கண்ணினால் அவர் நல் விழாக்கண்டு ஆடுதல்" அன்றையதினம் முத்துமாரி அம்பாளின் கும்பாபிடேக நிகழ்வையும் கருடனின் தரிசனத்தையும் கண்ட எம்கண்கள் மண்ணினில் பிறந்த பயனைப் பெற்றன என்பது நிதர்சனம்.

*(உசாத்துணை – தெல்லிப்பழை சைவாலயங்கள் பண்டிதர் அப்புத்துரை.)*

**தலம் : முருகன் கோவில்** **இடம் : காங்கேசன்துறை**

## மார்புநோய் வைத்தியசாலை

(தானதன தான தன்ன)

பாசமொடுகாலை வந்து பாலனுனை யேவ ணங்க
பாகனென வேயி ருந்து – அருள்வோனே
பாகுமொழி மாது தந்த பாணபடை வீடு நின்று
பாரிலரு ளேபொ ழிந்து – வருவேலா
காசமொடு ஈழை வந்து காசினியி லேவ வருந்தி
காலிணைய தேவி ழுந்து – அழவேதான்
காருணிய மேவ ழுங்கி காயமுறு நோயடங்கி
காணி நில மோடி வந்த அருள்நாதா
வீசருளி னோடெ ழுந்த வேல்வடிவி லேயி ருந்து
வீமமறு மாறு கந்து – பெருவாழ்வே
வீறதனி னோடி லங்க வேயருளு நாத வந்தன்
வீடுபெற வேயி ரங்கி – அருளாயோ?
மாசதில தான எங்கள் மாடியம தாயி ருந்து
மானதுட னேவி ளங்க – அருளீசா
மார்பிலுறு நோய கன்று போகஅமை சாலை நின்று
மாறவருள் வாரு கின்ற – முருகோனே.

(வீமம்– அச்சம் மாடியம் – கவசம்)

**தலம் : ஸ்ரீ முருகன் கோவில்** **இடம் : மயிலிட்டி**

(தனதனன தத்த தான)

உலைமெழுக தொத்து தாளை பணிபவரெ வர்க்கும் நாளும்
உலைவுறல றுத்து ஆசை – யவைபீவோய்
உதவிடுக ரத்த ராக மயிலதனி லுற்ற வேல
உமைசிவையள் பெற்ற பால – எனவோத
கலையழகு மிக்க மாத ரிருபுறமி ருக்க மூலம்
கருணைசெய்மு கத்தி னோடு – அமர்வேலா

கனதளர்வ துற்று வாடி கதியதென பற்று வாரை

கரிசனமெ டுத்து ஆளு – அருளாழி

மலைவினைவ ருத்த கான மயிலினிலி ருக்கு கோல

மனதினிலி ருத்து மாறு – அறியாதே

மடைமையொடி கத்தி லாடு மடையனுமுன் முத்தி ஈயு

மலரடிகி டக்கு பேறை – யருள்வாயோ?

அலையவையு கைக்கு வாரி அருகமைத லத்தை நாடி

அனைவருந்த ழைத்து வாழ – அருள்வேலா

அபயமென நித்த நாடி அடிதொழுவ ருக்கு வாழ்வை

அருளமயி லிட்டி மேவு – பெருமானே

**தலம் : நாராயணன் கோவில்** **இடம் : கீரிமலை**

(தானதன தான தன்ன)

தேடவரி தாயி ருந்து கூறுமச ரீரி கொண்டு

தேடியுனை யேய டைந்து – பரிவோடே

தேகமறு மாற வந்து தேவியவ ளாடு குன்றும்

தேடரிபன் னீர்ம ரங்கள் – அருகாயே

ஏடணைய தேநி னைந்து ஏடரதெ லாமி ணைந்து

ஈயுபெரு மால யம்நின் – றருள்வோனே

ஏதுமறு மாறி ரங்கி மாகருணை வாரு கின்ற

ஏதனென வேயி லங்கு – திருவோனே

நாடவைக ளேவ ழங்கு நாரணசு வாமி யுன்னை

நாடவறி யாது லைந்து – புவிமீதே

நாணமில நாய லைந்த ஞானமில லேனு மன்பர்

நாடுமடி கூடு மின்பை – யருளாயோ?

கேடவைக ளேகு மென்ற மூவகையு மேவி ளங்கு

கேணியுட னேயொர் குன்று – மிருகோவில்

கீதவிசை யேவ ழங்கு நாரணனென் றோத விந்த

கீரிமலை வாழ வந்த – பெருமாளே

(ஏடணை – விருப்பம், ஏடர்–தொழும்பர், ஏதம்–குற்றம்)

தலம் : முத்துமாரியம்மன் இடம் : கீரிமலை

(தானதன தன்ன தத்த)

பாசமொடு வந்து நித்தம் பாதமல ருந்து திக்க
பாரருள்வ ழங்கி வைக்க – வருதேவி
பாவவினை கொண்ட லைக்கு பாடவைகள் நின்ற ழிக்கு
பாவையென இங்கிருக்க – வருதாயே
தேசமது வும்சி றக்க தேசவைதொ டர்ந்தி ருக்க
தேவையவை யுங்கி டைக்க – அருள்தேவி
தேவரொடு கந்தர் சித்தர் சேவடிவ ணங்கி நிற்கு
தேவியிவ ளென்று ரைக்கு – புகழாழி
வாசமலர் தந்து தத்தை வாரடிவ ணங்கி நித்தம்
வாழுமுறை யின்றி நிற்கு – மடிநாயேன்
வாலையுன்ப தந்து தித்து வாரியுன்பு கழ்ப டித்து
வாழவடி யுங்கொ டுத்து – அருளாயோ?
மாசிமக முன்ப தத்தை நீரதனி லஞ்ச லிக்க
மாணதுற வுன்க டைக்க – ணருளேதான்
மாரியென தந்த ணைக்க கீரிமலை வந்து முத்து
மாரியென நின்றி ருக்கு – முமையாளே.

– ஆரபி

நேற்றைய பொழுதும் நிஜமில்லை
நாளைய பொழுது நிட்சயமில்லை
இன்றைக்கு மட்டும் நம்பிக்கையில்.....

தெய்வத்தின் விருப்பத்திற்கு எதிராக
எந்தவொரு மனித சக்தியும் நிறகமுடியாது.

- சுவாமி விவேகானந்தர்

# உச்சியில் இருந்தே ஆரம்பி

**திரு. பூ. சோதிநாதன் அவர்கள்**

*முன்னாள் விரிவுரையாளர்,*
*பேராதனைப் பல்கலைக்கழகம்.*

## முன்னுரை

திருவாசகமும், கந்தரலங்காரமும் மிக எளிய தமிழ் நடையில் உள்ள அருள் நூல்கள் ஆகும். சிவனடியார்களில் பலர் திருவாசகத்தையும், முருகனடியார்களில் பலர் கந்தரலங்காரத்தையும் தமது நித்திய பாராயண நூலாகக் கைக் கொண்டு வருகின்றனர். இவர்களில் சிலர் இந்நூல்களில் உள்ள பாடல்கள் அனைத்தையும் மனப் பாடம் பண்ணி வைத்திருக்கின்றனர். இன்னும் சிலர் அவற்றிலுள்ள ஒரு சில பாடல்களை மனப்பாடம் செய்து கொண்டுள்ளனர். இந்த இரண்டு நூல்களுக்கும் இடையே பல அம்சங்களில் ஒற்றுமைகளும் இருக்கின்றன. அந்த ஒற்றுமைகளுள் ஒன்றான உயர்ந்த சாதனை முறையையே இங்கு கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

## சாதனை முறைகள் ஏன்?

சாதனை முறை எதற்காகத் தேவை என்னும் ஒரு வினா எழுவது இயற்கையே. மனிதவாழ்க்கை அவ்வப்போது சிறுசிறு இன்பங்களைத் தருகின்றபோதும் துன்பம் மிகுந்தது என்பதை எல்லோரும் உணர்கின்றனர். துன்பங்களை நீக்கி இன்பங்களை மட்டுமே பெற மனித மனம் அலாவுகின்றது. அதனால் வாழ்க்கை எல்லோருக்கும் மிகப்பெரும் போராட்டமாகி, இன்பங்களுமே மாயை ஆகி ஏமாற்றி விடுகின்றன. ஆனால் சற்று ஆழ்ந்து கவனித்தால் துன்பங்கள் இன்றி இன்பங்களும், இன்பங்கள் இன்றித் துன்பங்களும் இருக்க முடியாது என்பது தெரிய வரும். இவை ஒன்றில் இருந்து மற்றையது பிரிக்க முடியாதபடி இணைந்துள்ள இரட்டைகள் ஆகும். ‘இரவும் பகலும் வந்துபோவது போல் இன்பதுன்பங்கள் வந்துபோகட்டும். பயப்படாதே’ என்றும் இன்பமும் துன்பமும் உலக இயற்கை அவற்றைப் பார்த்துக் கொண்டு சும்மா இரு என்றும் யோக சுவாமியின் அருள்வாக்குகள் எங்கள் ஆசான் அருள்மொழிகள் என்ற நூலில் உள்ளதை இங்கு ஞாபகப்படுத்தலாம். இன்பமும் துன்பமும் எதிர் சொற்கள் ஆகும். ஆனால் ஆனந்தத்திற்கு எதிர்ச் சொல் கிடையாது. ஆனந்தம் இரட்டைகள் அற்ற ஓர் ஒப்பற்ற நிலையாகும்.

துன்பங்கள் மனிதருக்கு ஒரு செய்தியை உணர வைக்கின்றன. துன்பங்களை நீக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள் என்பதே அந்தச் செய்தி ஆகும். துன்பங்களை நீக்க வேண்டுமாயின் அவற்றோடு இணைந்துள்ள இன்பங்களையும் நீக்கியே ஆக வேண்டும். ஆனால் மனதிற்கோ இன்பங்களை விட்டுப் பிரிய விருப்பம் இல்லை. இந்த இன்பதுன்பங்கள் என்ற இரட்டைகளை விடுத்து ஓடும் மனத்தை நிறுத்தி ஆனந்தம் காண வழிகாட்டுவதே சாதனை ஆகும். எல்லாச் சமயங்களும் அந்த ஆனந்தத்தை அடைய வெவ்வேறு வழிகளை, சாதனை முறைகளைக் காட்டுகின்றன. ஆனால் அவை கூறும் முடிவான நிலை முத்தி. வீடுபேறு, பேரானந்தம், சாத்தோரி என்னும் ஒரே விடயமாகும்.

## சாதனை முறை பல

சாதனை முறைகள் பலவாக இருப்பதற்குக் காரணம் ஒவ்வொருவரின் மன அமைப்பும் வெவ்வேறாக இருப்பதே ஆகும். ஒரு அருளாளர் தனது நூலிலேயே பல சாதனை முறைகளை எடுத்து இயம்பக் காரணம் வெவ்வேறு மனிதருக்கு வெவ் வேறு சாதனை முறை பொருத்த மாகும் என்ற நோக்கிலே தான் திருவாசகம், கந்தரலங்காரம், பகவத்கீதை முதலான உயர்ந்த நூல்களில் பல சாதனை முறைகள் கூறப்பட்டிருக்கும். அவரவர் தமக்குப் பிடித்த சாதனை முறையைப் பின்பற்றலாம். குறைந்த சாதனை முறைகளை உயர்ந்த சாதனை முறைகளுக்கு இட்டுச்செல்லும் வழிகளாகவே அருளாளர்கள் அமைத் துள்ளனர். உயர்ந்த சாதனை முறைகளைக் கண்டு ஒதுங்குபவர்களுக்கு குறைந்த சாதனை முறைகளாவது கவர்ச்சியாக இருக்கும் என்றும் பின் அவர்கள் உயர்ந்த சாதனை முறையையே பெருமையானது என உணர்ந்து கடைத்தேறுவர் என்றும் பெரியோர் வழிசமைத்தனர்.

## உயர்ந்த சாதனையின் தேவை

சைவ சித்தாந்த்திலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகளையும் அவற்றை மேலும் சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்பன முதலாக ஞானத்தில் ஞானம் ஈறாக பதினாறு சாதனைகளைக் கூறுவார். ஞானத்தில் ஞானமான பதினாறாவது சாதனையினால் பரமுத்தியும், ஏனையவற்றால் பத முத்தியும் கிட்டும் என்பர். பதமுத்தி என்பது இந்திரன் முதலான பதவிகளைத் தரும் குறைவான முத்தி என்றும், பரமுத்தியே முடிந்த முடிபு என்றும் கொள்வர்.

பேரானந்தம் என்ற பரமுத்தியாகிய இறுதி முடிபை அடையாது விடில் ஏனையவை எல்லாம் வெறும் ஆரவாரங் களாகவே இருக்கும் இதனைத் திருக் குறளில்,

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற.**

என்று கூறுவதைக் காணலாம். அதாவது எல்லா விதமான செயல்களையும் மன மாசுக்களை நீக்கிக் கொள்வதற்கு ஆகவே செய்ய வேண்டும் என்பதும், அப்படியல்லாத செயல்கள் வெறும் ஆரவாரங்கள் என்பதும் இக்குறளின் பொருளாகும்.

சுவாமி விவேகானந்தர் தனது ராஜ யோகம் என்னும் பதஞ்சலி யோகசூத்திர விளக்கத்தில் பின்வருமாறு கூறினார்.

"ஒவ்வொரு ஆன்மாவும் உள் நிறைந்த தெய்வத் தன்மை உடையது. உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் இயற்கையை அடக்கி உள்ளேயுள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே நோக்கம்... கொள்கைகளும், சடங்குகளும், நூல்களும், கோயில்களும், பிறவும் இதற்கு உதவி செய்யும் கருவிகளே".

பிரபுலிங்க லீலை என்னும் நூலில் இருந்தும் உயர்ந்த சாதனையின் அத்தியா வசியத்தை அறிய ஒரு செய்யுளை இங்கு எடுத்துக் கொள்ளலாம்.

**"உரைசெயிற் பரமஞானம் ஒன்றுமே முத்திக்கு ஏது**
**சரியை நற்கிரியை யோகம் தாம் ஒரு மூன்றும் ஞானம்**
**மருவுதற்கு ஏது என்றே மறை புகன்று உரைக்கும் இந்தக்**
**கருவியைப் பொருள் என்று எண்ணிக் களிப்பவர் கயவர் அன்றே".**

மேற்காட்டியவற்றில் இருந்து ஆர வாரங்கள் நிறைந்த சாதனை வழி

களிலேயே காலம் முழுவதையும் விரயம் ஆக்காது உயர்ந்த சாதனை முறையையே பின்பற்ற வேண்டும் என்பது வெள்ளிடை மலையாகும். யோகசுவாமி இதனைச் சொல்வதே ஒரு தனி அழகு உடையது. அது வருமாறு:-

**"பனையிலுள்ள கள்ளைக் குடிப் பதற்கு எறும்பு மெல்ல மெல்லமாக ஏறிக் குடித்து விட்டு மாண்டு விடுகிறது. சிலர் முயற்சி இதனை ஒக்கும். ஆனால் காகங்கள் பறந்து சென்று குடித்துவிட்டுப் போவது போலச் சிலர் செய்வர்".**

**மனத்தைச் சிதாகாய வெளியில் நிறுத்துவது.**

திருவாசகமும், கந்தரலங்காரமும் சீவனைத் தேகமாகிய சிறையை விட்டு நிராதாரம் ஆக்குவதை உயர்ந்த சாதனை முறையாகக் காட்டுகின்றன. மனத்தைச் சிதாகாய வெளியில் நிறுத்துவதே இந்தச் சாதனையாகும். இடைவிடாத சாதனை யினால் அவ்வாறு மனத்தைச் சிதாகாய வெளியில் நிறுத்திக் கொள்ள முடியும். "எவ்வாறு நீ உன்னைப் பாவனை செய் கிறாயோ அவ்வாறு நீ ஆவாய்" என்பதை புத்தர், யேசு, ஜேம்ஸ் அலன் முதலாக எல்லா அருளாளர்களுமே கூறியிருக் கின்றனர். எல்லாச் சமயங்களுக்கும் இந்த விடயம் ஒப்ப முடிந்த முடிபாகும். எங்கள் யோக சுவாமியும் நற்சிந்தனையின் உரைநடைப் பகுதியில் சிவோகம் பாவனை என்ற தலைப்பில் **"ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான்" என்றும்**, சிவனடியார் என்ற தலைப்பில் **"எதை நீ பாவனை செய்கிறாயோ அது நீ ஆவாய்" என்றும்**, உத்தம இரகசியம் என்ற தலைப்பில் **"இவ்வொழுக்க வழியில் நின்று எல்லாம் நாம் என்று பாவனை செய்து வரவர அற்புதமான அநுபவங்கள் மூலமாக நாங்கள் சடப்பொருள் அல்ல. சித்துப்பொருள் என்று தெளியலாகும்"** என்றும், அருள்மொழிகள் என்ற நூலின் 93ஆம் பக்கத்தில் **"எதை நீ எண்ணுகின் றாயோ அது நீ ஆகிறாய்"** என்றும் பல தடவைகள் கூறியிருப்பதிலிருந்து இந்தப் பாவனையின் முக்கியத்துவத்தை ஒருவாறு அறியலாம்.

சாதனையைச் செய்து மனத்தைச் சிதாகாயத்தில் நிறுத்தியதும் மனம் தனது சேட்டைகளை விட்டு விடும். மனத்தின் சேட்டைகள் நின்றதும் பிராண சயம் ஏற்படும். பிராணனும், மனமும் ஒன்றோ டொன்று தொடர்புள்ள இரண்டு விடயங் களாகும். பிராணனைக் கட்டுப்படுத்தும் வரைக்கும் மனது தன் செயலை நிறுத்தி விடும். ஆனால் அக்கட்டுப்பாட்டை விட்டதும் மீண்டும் மனம் செயற்படத்தொடங்கித் தன் சேட்டைகளில் இறங்கிவிடும். இதனால் மூச்சுப்பயிற்சி ஆகிய பிராணாயாம முறையை, அதாவது கடயோக சாதனையை உயர்ந்த சாதனையாக அருளாளர்கள் கொள்வதில்லை. இதனைத் தெளிவாக அருணகிரிநாதர் தனது கந்தரலங்காரத்தில் பின்வருமாறு விளக்கி உள்ளார்.

**துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்து**
**அருத்தி உடம்பை ஒறுக்கில் என்னாம் சிவயோகம் என்னும்**
**குருத்தை அறிந்து முகம் ஆறுடைக் குருநாதன் சொன்ன**
**கருத்தை மனத்தில் இருத்தும் கண்டீர் முத்தி கைகண்டதே.**

எனவே மனத்தைச் சிதாகாய வெளியில் நிறுத்திக் கட்டுப்படுத்தினால் பிராணசயம் தானாகவே ஏற்படும். மனம் வேகமாகச் செயற்பட்டுக்கொண்டு இருக்கும் போது சுவாசமும் வேகமாக

நடைபெறுவதையும், மனம் மிக ஆறுதலாகவும் அமைதியாகவும் செயற்படும் போது சுவாசம் நடைபெறுவது தெரியாதவாறு மெதுவாகவும் ஒழுங்காகவும் இருப்பதையும் கொண்டு இதனை உய்த்து உணர முடியும். பிராணசயம் ஏற்படும் நிலையில் ஆன்மாவின் சட்டைகளாகிய பஞ்ச கோசங்களில் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம் என்ற மூன்றும் செயலற்றுவிடும். அப்போது விஞ்ஞானமய கோசம் செயற்பட ஆரம்பிக்கும், விஞ்ஞானமய கோசம் செயற்பட ஆரம்பிக்க உடம்பு தெய்வத்தன்மை உள்ளதாக மாறி அகண்ட தூய அறிவு உண்டாகும். விஞ்ஞான மயகோசம் வரைதான் மனித முயற்சி தேவைப்படுகிறது. அதற்கு அப்பாலுள்ள ஆனந்தமய கோசமும் அதன் மேலுள்ள நிலைகளும் தானாகவே வந்து அமையும். யோக சுவாமி **"அங்காலை அது இழுத்துப்போகும்"** என்ற வாக்கியத்தினால் அதனை விளக்கியுள்ளார். இந்துசமய நூல்கள் எல்லாமே இறைவன் வலிய வந்து ஆட்கொண்டதாகப் பறைசாற்றுவது இந்த விடயத்தையே ஆகும்.

### சில எடுத்துக்காட்டுகள்

திருவாசகத்திலும், கந்தரலங்காரத்திலும் உடல் சிறையை விட்டுச் சீவனை நிராதாரம் ஆக்க வேண்டும் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளை இங்கே காண்போம்.

திருவாசகத்தில் உள்ள 51 தலைப்புகளில் ஒன்று செத்திலாப்பத்து என்பதாகும். திருவாசக உண்மை "பசுபோதம் முற்றும் கெட வேண்டலே செத்திலாப் பத்து" என்று செத்திலாப்பத்தின் உட்பொருளைத் தெளிவாக விளக்குகிறது. 'இன்னும் செத்திலேன்' பரியா உடல் தன்னைச் செற்றிலேன்' எனைச் செத்திடப் பணியாய் காய மாயத்தைக் கழித்து அருள் செய்வாய், 'பொறுக்கிலேன் உடல்', 'இறக்கிலேன்' என்றும் பல பாடல்களில் உடல் சிறையை நீக்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார். இவை மட்டுமன்றித் திருச்சதகத்தில் 44 ஆவது பாடலில் 'படிற்றாக்கையை விட்டு உனைப் பூணுமாறு அறியேன்' என்றும், 54 ஆவது பாடலில் 'மலமாக்குரம்பை இது மாய்க்க மாட்டேன்' என்றும், 55வது பாடலில் 'ஊனார் புழுக்கூடு இது காத்து இங்கு இருப்பது ஆனேன்' என்றும், 56 ஆவது பாடலில் 'முடையார் புழுக்கூடு இது காத்து இங்கு இருப்பதாக முடித்தாயே' என்றும், 61ஆவது பாடலில் 'தரிக்கிலேன் காய வாழ்க்கை' என்றும், 64ஆவது பாடலில் 'உடலிது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்து அருளு போற்றி' என்றும், 65ஆவது பாடலில் 'இங்கு இவ்வாழ்வு ஆற்றகில்லேன் எம்பிரான் இழிந்திட்டேனே' என்றும், 66ஆவது பாடலில் 'ஒழித்திடு இவ்வாழ்வு போற்றி' என்றும், 83 ஆவது பாடலில் 'செடிசேர் உடலம் இது நீக்க மாட்டேன்' என்றும், 93ஆவது பாடலில் 'மாண்டிலேன்' என்றும், நீத்தல் விண்ணப்பத்தில் 41ஆவது பாடலில் 'விடக்கு ஊன் மிடைந்த காயம் பொறேன்' என்றும், 42ஆவது பாடலில் 'ஊன் கழியா விதி அடியேனை விடுதிகண்டாய்' என்றும், மாணிக்க வாசகர் தனது உடற்சிறையில் இருந்து நீங்கவேண்டும் என்ற பெருவிருப்பை வெளியிடுகின்றார்.

உடற்சிறை நீங்கினால் 'அண்டமும் வந்து நம்முள் அகப்படும்', 'அண்டர் நாடு ஆளலாம்', இறைவனே 'செடிசேர் உடலைச் செல நீக்கிச் சிவலோகத்தே வைப்பான்' என்றவாறு மாணிக்கவாசகர் உயிர் உள்ள

போதே உடல் சிறையில் இருந்து சீவனைப் பிரிப்பதற்குப் போராடியதையும் இறுதியில் அவர் அதில் வெற்றி அடைந்ததையும் காணலாம்.

இனி கந்தரலங்காரத்தில் இதற்கான சான்றுகளைக் காணலாம். பத்தொன்பதாவது பாடலில் 'நிர்க்குணம் பூண்டு என்னை மறந்து இருந்தேன். இறந்தே விட்டது இவ்வுடம்பே' என்றும், 31ஆவது பாடலில் 'பொக்கக்குடிலில் புகுதாவகை' என்றும், 42ஆவது பாடலில் 'நிணம் காட்டும் கொட்டிலை விட்டு ஒரு பூதரும் அறியாத் தனி வீட்டில் உரை உணர்வு அற்று இரு. பூத வீட்டில் இராமல் என்றும் உடற்சிறையில் இருந்து நிராதார நிலையில் சிதாகாய வெளியில் இருந்ததை விளக்கிக் காட்டுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள். அவரும் அந்த முயற்சியில் வெற்றி கண்டமையைக் கந்தரலங்காரத்தில் காணலாம்.

## குறியீடுகளில் நிராதார சாதனை

கோயில்களில் செய்யப்படும் கிரியைகளிலே இந்த நிராதார சாதனையைக் குறியீடு ஆகச் செய்யப்படுவதை இவ்விடத்தில் கூறுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

கோயில்களிலே செய்யும் நித்திய, விசேட பூசைகளிலே உடலில் சிறைப்பட்டிருக்கும் சீவனை உடலில் இருந்து வெளியே நிராதரவாகக் கொண்டு வரவேண்டும் என்ற விளக்கம் உள்ளது. அந்தக் குறியீட்டை வெறும் கிரியை ஆக மீண்டும் மீண்டும் செய்வதோடு திருப்தி கண்டு கொள்கின்றோம். உண்மையை உணர்ந்து அதனைச் செயலில் அமுல்படுத்துவது இல்லை. முறையாக ஆகமவிதிப்படி கட்டப்பட்ட கோயில்கள் மனித உடலின் அமைப்பில் அமைக்கப்படுவது மரபு. கோயிலில் செய்யும் நித்திய பூசைகளின் போது சுவாமியை எடுத்து வெளியே வீதிக்குக் கொண்டு வருவது இல்லை. அதன் உட்பொருள் ஆன்மா உடலுள் இருப்பதைக் குறிக்கும். விசேட திருவிழாக்களின் போது கோயில் கட்டடத்துக்கு வெளியே சுவாமியை வெளி வீதி கொண்டு வருவார்கள். அதன் உட்பொருள் உடலில் சிறைப்பட்டிருக்கும் ஆன்மாவை உடலில் இருந்து வேறாக்கி நிராதார நிலைக்குக் கொண்டு வருவதைக் குறிக்கும்.

விசேட திருவிழாக்களின் போது செய்யும் கொடியேற்றமும் இவ்விடயத்தையே குறியீடாகச் செய்யப்படுகிறது. கொடியேற்றும் போது ஒரு நீண்ட வெள்ளைச் சீலையின் ஓர் அந்தத்தில் நந்தியின் படத்தை வரைந்து அத்துடன் ஒரு சிறு மணியையும் சேர்த்துக் கொடிக் கம்பத்தில் ஏற்றுவார்கள். அதில் நந்தி ஆன்மாவைக் குறிக்கும். அச்செயல் ஆன்மா உடல் சிறையில் இருந்து நீங்கி நிராதார நிலைக்குச் செல்வதை குறியீடாகக் காட்டுவதாகும். அதிலுள்ள சிறிய மணி நாதத்துவத்தைக் குறிக்கும். உயர்ந்த சாதனையைச் செய்பவர்கள் பத்து விதமான ஒலிகளைக் கேட்பார்கள். அதில் ஒன்று மணி ஒலி ஆகும். ஆன்மா நிராதார நிலையில் நிற்க, நாத சம்மியம் துணைபுரிவதை, அச்சிறுமணி குறிக்கிறது.

## மணிவாசகரதும் அருணகிரி நாதரதும் அநுபவங்கள்

மணிவாசகரும், அருணகிரி நாதரும், அந்த உயர்ந்த சாதனையை மேற்கொண்டு இறுதியில் அதன் விளைவாகப் பேரானந்தத்தைப் பெற்றார்கள். அதனை அவர்களே கூறுவதைக் காண்போம்.

"சொல்லுவது அறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத்துளை தொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங்கொண்டு ஒருருச் செய்து ஆங்கு எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன் என்னில்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பரா அமுது ஆக்கினன்".

*– திருவண்டப் பகுதி. 163 – 181*

"போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும் இல்லாதது ஒன்று வந்து வந்து
தாக்கும் மனோலயம் தானே தரும் என்னைத் தன் வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல் லொணாதது இந்த
ஆனந்தமே". *– கந்தரலங்காரம், 73.*

மணிவாசகப் பெருமான் 'சொல்லுவது அறியேன் என்றார். அருணகிரிநாதப் பெருமான் 'சொல்ல ஒணாதது' என்றார். எனினும், அந்த அனுபவத்தை அவர்கள் வார்த்தைகளிலே தருவதற்கு முயற்சித்து இருக்கின்றார்கள். அவர்கள் இருவரும் வார்த்தைகளினால் சொல்லிய மயிர்க் கூச்செறியச் செய்கிறது என்றால், அவர்கள் அடைந்த அந்த அனுபவம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும். சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய அந்தப் பேரின்பம் ஒப்பில்லாதது. மிக உயர்ந்தது, அதற்குமேல் எதுவும் இல்லாதது, வார்த்தை களுக்குள் அகப்படாதது. அதனாலேதான் அருணகிரிநாதர் தனது கந்தர் அனுபூதியில் **'அவ்வாறு அறிவார் அறிகின்றது அல்லால் எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே'** என்று அந்த அனுபவத்தின் பெருமையைக் கூறுகின்றார்.

நாமும் சிறிய சிறிய விடயங்களுக்காக எனது, உனது என்று சண்டையிட்டு மோசம் போய்விடக்கூடாது. நம்முள் உறைகின்ற ஆன்மா பெரும் சக்தியை வெளியே கொண்டு வருவதற்கு ஆனமட்டும் முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சிக்கு அந்தச் சக்தியே உதவுவதற்கும் காத்துக்கொண்டு தயாராக இருக்கின்றது.

## முடிவுரை

யோகசுவாமியினது நற்சிந்தனை உரைப்பகுதியிலும், அருள்மொழியிலும் பல இடங்களில் உச்சியில் நிற்றல் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். அவை உயர்ந்த சாதனையில் ஈடுபடுபவர்களுக்கு மிகப் பயனுள்ள அருள்மொழி வாசகங்களாகும். அவற்றுள் இரண்டு பகுதியை இங்கு உதாரணத்துக்காகத் தரலாம்.

**"நீ உச்சியில் நிற்கிறாய் ஆனால் நீ மறந்து விட்டாய். நீ அங்கு நிற்பதாக எண்ணிக் கொள். அப்போது நீ அங்கே நிற்பாய்".**

*– அருள்மொழிகள், பக் : 89*

**"உச்சியில் ஒன்றுமில்லை அங்கு கடவுளே உளர். மற்றைய யாவும் மாயை"**

*– அருள்மொழிகள், பக் : 99*

சேக்கிழார் பெருமான் தனது பெரிய புராணத்தில் உபநிடதத்தின் உச்சியாக சிதாகாய வெளி இருக்கின்றது என்றும்

அதற்கு உரிய உருவமாகவே தில்லைச் சிதம்பரம் விளங்குகின்றது என்றும் கூறுகின்றார்.

**"கற்பனை கடந்தசோதி**
**கருணையே உருவ மாகி**
**அற்புதக் கோலம் நீடி**
**அருமறைச் சிரத்தின் மேலாம்**
**சிற்பர வியோம மாகும்**
**திருச்சிற்றம் பலத்துள் நின்று**
**பொற்புடன் நடம் செய்கின்ற**
**பூங்கழல் போற்றி போற்றி".**

*பெ.பு. :351*

சேக்கிழார் பெருமான் 'சிற்பர வியோமம், அதாவது ஞான ஆகாசம் என்று சிதாகாய வெளியை இங்கே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

இவ்விடத்தில் சென் பௌத்த மதத்தின் குரு ஒருவருக்கும், அவரது சீடனுக்கும் இடையே நடந்த சம்பாஷணையை ஞாபகப்படுத்துவது மிகப் பொருத்தமாக அமையும்.

சீடன் : சுவாமீ. நான் மலை உச்சிக்குச் செல்ல விரும்புகின்றேன். எங்கே இருந்து ஆரம்பிக்க வேண்டும்?

குரு : பிள்ளாய் : உச்சியில் இருந்தே ஆரம்பி.

நன்றி – சிவதொண்டன்
சிவலோக சுவாமிகள் ஐம்பதாவது ஆண்டுச் சிறப்பு மலர்.

**அது நான் என்னும் அகலாத் தியானத்தால்**
**மதுவுண் வண்டுபோல் ஆயினர் பலரே**

*– நற்சிந்தனை–*

**சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்ததல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்ததாகும்.**

**– சுவாமி விவேகானந்தர்**

# பிரணவ செந்தூரம்

முன்னாள் பொறுப்பு வைத்தியர்
**திரு. சோ. சொ. வடிவேல் அவர்கள்**
*(அளவெட்டி வைத்தியசாலை)*
*(ஈழ கேசரி 1939 மலரிலிருந்து)*

அநேகர் என்னை உடல் வைத்தியத்துடன் ஆன்மவைத்திய போதனையுஞ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டபடியால் அது விஷயத்தில் அடியேனுக்குப் போதிய ஞானமில்லாதிருந்த போதிலும், திருவருளை முன்னிட்டு ஆன்ம வைத்திய போதனையை உடல் வைத்தியத்துடனுவமித்து, குடிநீர், மும்மாத்திரை முறையாக முன் கூறியுள்ளேன். ஆன்மா ஒரு வியாதியஸ்தன். வியாதிகள் ஆணவம் கன்மம் மாயை, இன்பதுன்பம் மருந்து, வைத்தியநாதன் கடவுள். மும்மாத்திரை மணிமந்திர ஔடதம். மணி என்பது உருத்திராக்கம், மந்திரம் ஸ்ரீ பஞ்சாட்சரம் ஔடதம் வீபூதி ஆகியன. இஃது

**“அருளினா லுரைத்த நூலின் வழிவராத் தன்மஞ் செய்யி**
**னிருளிலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்**
**பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புண்ணியந்**
**– தீர்ப்பன்**
**மருளிலா மலங்க டீர்க்கும் மருந்திவை வைத்திய நாதன்”**

சிவஞானசித்தியார் திருவாக்கிலினிது புலனாகின்றது.

**“உன்னு முளதைய மிலதுணர்வா யோவாது**
**மன்னுபவந் தீர்க்கு மருந்து”**
(திருவருட்பயன்)

ப–ரை: உணர்வாய் – ஞானமாய் நின்று, மன்னு பவம் – அநாதியான பிறவிக்குக் காரணமாகிய ஆணவமென்னும் வியாதியை, தீர்க்கும் மருந்து ‘திருவருளென்னும் மருந்தை ஊட்டித் தீர்க்கும் வைத்தியநாதராகிய சிவபெருமானை, ஓவாது உன்னும் – இடையறாமல் அன்போடு நினைத்து வழிபடுங்கள், உளது – இதனால் வரும் முத்தியின்பமே நிலையான செல்வம், ஐயம் இலது – அவரை அன்போடு வழிபட்டால் அந்த முத்தியின் பத்தை விரைவில் அடைதற்குச் சந்தேகமில்லை.

உபாத்தியாயர்கள் வித்தியாசாலைகளிலே ஒருபந்தைக் கையில் வைத்துப் பூமியுருண்டையென்பதை அப்பந்து மூலமாக மாணவர்க்கு விளக்கிக் கற்பிப்பது போல் யானுமிப்போ விநாயகப்பெருமானை வைத்திய விதிப்படி ஒரு செந்தூரமாக உவமித்து விள்க்கிச் சொல்லுமாறு தொடங்குகின்றேன்.

முனீஸ்வரர்கள் செந்தூரங்கட்கெல்லாம் பிரணவ செந்தூரம், நமசிவாய செந்தூரம், பஞ்சாட்சர செந்தூரம், பஞ்சப் பிரம செந்தூரம், சடாட்சர செந்தூரம், சடாட்சர அக்னி குமார செந்தூரம், சண்முக செந்தூரம், குமார செந்தூரமெனப் பல மூர்த்திகளின் திருநாமங்களையே கற்பனை நாமங்களான இட்டுப்பாரம் பரியமாக வழங்கி வந்திருக்கிறார்கள் என்பதை வைத்திய வாகட சாஸ்திரங்களிலே நாங்கள் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம்.

இவற்றுள் பிரணவ செந்தூரமே மிகவும் முதன்மையானது எங்ஙனமெனில் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஆன்மாக்

களுக்கு அருள் செய்யக் கொண்டருளிய முகூர்த்தங்கள் பல உள. ஓங்கார வடிவமாய்ச் சிவபெருமானுடைய ஞானசக்தி ஆன்மாக்களுக்கு ஞானத்தைக் கொடுக்கும் போது பிரணவ மூர்த்தியென்றும் விக்கினத்தைப் போக்கும்போது விக்கினேஸ்வரர் என்றும், உலகத்துக்குத் தலைவராதலில் விநாயகர் என்றும் பெயர் பெறுவர்.

ஒரு வைத்தியன், ஒரு சரக்கைச் செந்தூரமாக்க வேண்டுமாயின் அதைக் கடையில் வாங்கவேண்டும். பின் சுத்தி கரிக்க வேண்டும், அதன் சத்துரு மித்துரு வறிந்து கூட்டுச்சரக்கைக் கூட்டிக் கல்வத்திலிட்டு அச்சரக்கை நீற்றக்கூடிய மூலிகைச்சாற்றை விட்டுச் சாமக்கணக்குக் கரைக்க வேண்டும். அரைத்த மருந்தை யடைப்பதற்கு ஒரு குப்பி வேண்டும். மருந்தைக் குப்பியிற் செலுத்திய பின் மேல் மூடி போட்டுச் சந்துபந்தனஞ் செய்து 5, 7, 9 என்ற கணக்கில் சீலைமண் செய்து அடுப்பிலேற்ற வேண்டும். காற்று முதலிய இடர்கள் ஏற்படாமல் மறைக்க வேண்டும். மருந்தின் தன்மைக் கேற்ற சாதி விறகு வேண்டும் அவ்விறகால் தீபாக்கினி கமாலக்கினி காட்டாக்கினியாய், வேண்டிய சாமங்கட்கு எரித்தல் வேண்டும். பின் ஆற விடல் வேண்டும். நன்றாக ஆறிய பின் அருணோதயம் போற் சிவந்திருக்கும் செந்தூரத்தைக் கப்பியாற் பிரித்தெடுத்து காலம் தேசம் தேகம் ரோகியை யறிந்து பணவிடை விராகன், குன்றி முதலிய பிரமாணமாக இஞ்சி தேன் முதலிய அனுபா னங்களுடன் வாதாதி முத்தோஷந்தீர நோயின் தன்மைக் கேற்ற பத்தியத்துடன் அருந்தும்படி கற்பிக்க வேண்டும்.

இனி ஆன்ம வைத்திய முறையை ஒப்பிட்டுக் காட்டுதும்.

ஓம் எனும் பிரணவத்துள்ளுறை பொருளாகிய சரக்கை ஒரு ஆன்ம வைத்தியன் செந்தூரஞ் செய்யப்பரீட்சை பண்ணிப் பார்க்கும் பொழுது, அ.உ.ம். என்று சொல்லப்படுகின்ற மூன்று அட்சரங்களைத் தன்னுள் அடக்கியிருப்பதை இலகுவில் அறிவான். இச்சரக்கைத் தேடவேண்டுமானால் மருந்துச்சரக்கு மளிகையில் அகப்படாது. விலைகொடுத்து வாங்கவும் முடியாது. அளவு நிறையுரை முதலிய வற்றிற்கு மகப்படாது. பின்னைத்தான் எங்ஙனம் பெறுவதென்றால் ஆலயங்களிலும் வேதாத்தியானஞ் செய்யுமிடங்களிலும் அகமலிவாகப் பெற்று சித்தி புத்தி வல்லபையாகிய கூட்டுச்சரக்குகளையுங் கூட்டி, மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்கட்குப் பெருமாதாரமாகும். மூலாதாரத்திலுள்ள நாலிதழ்க்கமலமாகும் குழியம்மியிலிட்டு சிவயோகம் பாவனையாகிய மூலிகைச் சாற்றையூற்றிசக்திக்குத் தகுந்தவாறு, பிராண வாயுவாகிய குழவியாலரைத்து ஆன்ம போதமாகிய குப்பியைச் சுத்திசெய்து, ஓங்காரத்துள்ளுறை சரக்கை யடைத்து கும்பகமென்னுஞ் சில்லிட்டு அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல்லாகிய காற்று வராமற் தடுத்து, ரேசகபூரக கும்பகமென்னுஞ் சீலைமண் மாற்றி மாற்றிச் செய்து ஐம்பொறியடக்கலாகிய அடுப்பிலேற்றி காமக்குரோத லோபபோகமதமாச்சரிய மென்கிற கூடா விறகுகளைக் களைந்தெறிந்து ஏகாக்கிர சிந்தையென்னும் ஒரு சாதி விறகால் அறுகுவன்னி மந்தாரை அட்சதை முதலிய வற்றால் தீபாக்கினியாயும், கணானாந்துவா மந்திரத்தோடு ஓமம் வளர்த்தலால் கமலாக்கினியாயும் விநாயக மகோற்சவாதி முதலியவற்றால் காட்டாக்கினியாயுமெரித்து,

நிஷ்டை கூடுதலாகிய பெறு பேற்றால் அக்குகையை ஆறும்படி செய்து சீவ காருண்ணியம் இரக்கம் பொறை லோகோப காரம் முதலாகிய கம்பிகளின் உதவியைக் கொண்டு கவசத்தைப் பிரித்தால் செக சோதிப் பிழம்பாகிய பிரணவசெந்தூரந் தோன்றும், இப்படிக் கொள்ளப்பட்ட செந்தூரத்தை மனம் புத்தி சித்தமகங் காரங்களினாற் சிந்தாமல் கால தேசவர்த்த மானங்கட்கேற்ப, தனித்துவம் வேறு மருந்துகளுடனும் அளவாகவும் மித மிஞ்சியும் அவல் பொரிகரும்பு மோதகம் தேங்காய் முக்கனி தேன் நெய் பால் அனுபானங்களுடன் முக்காலங்களிலும் மாதந்தோறும் வருஞ் சதுர்த்தியிலும் விசேஷமாக ஆவணிமாதப் பூர்வபக்ஷ சதுர்த்தி மார்கழிமாத விநாயக ஷஷ்டி சதயத்திலும் மகோற்சவ காலங்கலும் விரதங்காத்தலாகிய பத்தியங்காத்தால் பூதப்பிசகிரகரோக கஷ்டங்களினின்று நீக்கி நித்தியானந்தப் பெரு வாழ்வாகிய சுகம் பெறலாம்.

மேற்கூறிய விஷயங்களிரண்டையும் ஒப்பிட்டு விளங்குவதற்கு சில குறிப்புக் களைக் கீழே தருவோம்.

உயிர்ச்சரக்கு : விநாயகப்பெருமான், அகபவாக வாங்குமிடம் : ஆலயங்கள், வேதாத்தியான செய்புமிடங்கள் (இவ்விடங் களில் ஓம் எனும் ஒலி நிராமாயுண்டு), அளவு, நிறை, புரை முதலியவற்றிற் அகப்படாது : மனமொழி மெய் இவைகட்ககப் படாது மனதால் நினைக்கவும், வாயாற் சொல்லவும், சரீரத்து தீண்டவும், முடியாது. (வாசாமகோசரம்), சுத்தி இல்லை (சுயம் பிரகாசமாயுள்ளவர்); கூட்டுச்சரக்கு சித்தி, புத்தி, வல்பை : கல்வம் (குழியம்மி) மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி ஆக்ஞை என்னும் ஆதாரங்கட்கு பெருமாதாரமாகும் மூலாதாரத்திலுள்ள நாலிதழ்க்கமலம் : குழவி, பிராணவாயு வாகி குழவி, மூலிகைச்சாறு : சிவயோகம் பாவனையாகிய சாறு: சாமக்கணக்கு: காலத்துவமாகிய எல்லைகள் குப்பி : ஆன்ம போதம், மருந்தடைத்தல், விநாயகப் பெருமானாகும் சரக்கையுட்புகுத்தல், மேல் மூடி கும்சம், சந்துபந்தனம், யோக சாதனை, சீலை மண்ரேசகபூரக கும்பகம், அடுப்பு, ஐம்பொறியடக்கக் காற்று முதலிய இடர்கள். அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச் சொல் முதலிய, கழிக்கும் விறகு : காமக்ரோத லோப மோகமதமார்ச்சரியமென்னும் காஷ்டங்கள் சேர்க்கும் விறகு : ஏகாக்கிர சிந்தை யென்னும் ஒரு சாதி விறகு : எரித்தல் (a) தீபாக்கினி : அறுகு வன்னி அசதை : (b) கமலாக்கினி : கணானாந்துவா மந்திரத் தேர் ஓமம் வளர்த்தல் (c) காட்டாக்கினி : விநாயகமகோற்வாதிகள் : ஆறவிடல் : சமாதி நிஷ்டை முதலிய செயல்களால் புலன்களையாறவிடல் : பிரித்தெடுக்கும் கம்பிகள் சீவகாருண்ணியம் இரக்கம் தயை லோகோபாகாரம், சீதாமல் எடுப்பதற்கு இடராயுள்ளன: மனம் புத்தி சித்த அகங்காரம் : காலம் தேசம் தேகம் ரோகியறிந்து கொடுத்தல் : கால தேச வர்த்தமானங்கட்கிசைய வழிபடல் அளவாக புசித்தல் : நித்திய பூசை முதலியன : மிதமிஞ்சி புசித்தல் : நைமித்தியங்கள் : (a) தனியுபயோக விநாயகரை மாத்திரம் வழிபடல் : (b) வேறு மருந்துகளுடன் உபயோகம் : மறுமூர்த்திகளுடன் வழிபடல் : அனுபானம், அவல் பொரிகரும்பு மோதகம் தேங்காய் முக்கனி. தேன், நெய், பால், பத்தியம் : விநாயகவிரதாதிகள்.

**தீரும் நோய் பிறவிப்பணி :**

தேன் பொருள் : ஆலயத்திற்குச் சென்று சுயம் பிரகாசமாயுள்ள ஓமெனும் பிரணவத்துள்ளுறை பெருளாகிய விநாயகப் பெருமானையும் சித்தி புத்தி வல்லபையாகிய சக்திகளையும் வணங் குங்கால் கணேசனை மூலாதாரத்தி லிருந்து வழிபட்டு, (தத்துவ சாஸ்திரங் களும் சைவசித்தாந்தங்களும் கணே சனுக்கிருப்பிடம் மூலாதாரமென முழங்கு கின்றன) உள்ளிருத்தல் அடக்கல் வெளி விடுதலாகிய பிராணாயாம முறைகளை ஆட்சியில் வருவித்து ஐம்புலன்களையு மடக்கி காமக் குரோத லோப மதமாச்ச் சரியமென்கின்ற குற்றங்கள் வராமற் காத்து, சதாத்தியானமாயிருந்து, அறுகு வன்னி மந்தாரமலர் அட்சதை முதலிய வற்றால் அர்ச்சித்தும், கணானாந்துவா மந்திரத்தோடு ஓமம் வளர்த்தும், விநாயக மகோற்சவாதி கொண்டாடியும், முடிவில் மனது இறந்தநிலையில் நிஷ்டை யிலிருந்தும், சீவகாருண்ணியம் இரக்கம் தயை லோகோபகாரங்களை எமது தொழிலாக்கக் கொண்டும், திரும்பவும் மனம் புத்தி சித்தம் அகங்காரமாகிய தீயகுணங்கள் வராமல், காலதேச வர்த்த மானங்களுக்கிசைய மூர்த்தி தலம் தீர்த்தம் பூசைத்திரவியம் மந்திரம் கிரியாபாவனை யாதியவற்றை மாற்றி மாற்றியும், (விநாயகமூர்த்தியைத் தன் வழிபடு மூர்த்தியாக வைத்துக் கொள்ளு மொருவன் மற்ற மூர்த்திகளை வழிபடா திருந்தாலும் முத்தியடையலாம். இப்பெரு மானுடைய வழிபாட்டுடனன்றி மற்ற மூர்த்திகளைத் தனித்துவழிபட வேதா கமங்கள் இடங்கொடா) ஆகையால் இப்பெருமானைத்தனித்தும் வேறு மூர்த்திகளுடனும் ஆடம்பரத்துடனும் ஆடம்பரமின்றியும் வணங்கி இவருக்குப் பிரீதியாக அவல், பொரிகரும்பு, மோதகம், தேன், நெய், பால், பழவகை முதலியவற்றை நிவேதிப்பித்து மாதந் தோறும் வரும் சதுர்த்தியிலும் விசேஷ மாக ஆவணிமாதப் பூர்வபக்ஷ சதுர்த்தி யிலும் மார்கழிமாத விநாயக ஷஷ்டி சதயத்திலும் மகோற்சவ காலங்களிலும் விரதங்காத்தல் பூதப்பிசாச கிரகரோகங் களால் வருங்கஷ்டங்கள் தீர்ந்து பிறவி நோய் நீங்கி நித்தியானந்தப் பெருவாழ் வாகிய சுகம் பெறலாமென்று சைவசிந் தாந்தம் கூறுகின்றது.

மேலே சொல்லிய பத்தியமாகிய விரதங்காத்தலால் வரும் மற்றொரு பயனையும் சற்றே விளக்குகின்றேன். சமயசம்பந்தமான விரதங்களை பூசிக்கும் போது ஆன்மா சாந்தமடைவதற்கு ஒரு வழியும் தேகநோய் நீக்கத்துக்கு ஒரு வழியுமாய் அமைந்திருக்கின்றன. உதா ரணமாகச் சொல்லுமிடத்து தற்காலத்தில் அனேகருக்குக் காணப்படும் (Blood Pres-sure) பித்தாதிக்க இரத்தரோகத்திற்கு மூத்திவர்த்தினி விரேசனகாரி அவுஷதங் களையுபயோகிப்பதும் கொழுப்புள்ள பதார்த்தங்களையுண்ணாமல் விடுவிப்பதும், லங்கணம் பரம அவுஷதமென்ற வாக்கி யப்படி பொதுவாக உண்டி சுருக்கலும் உபவாசம் நியமித்தலுமே விசேஷ சிகிச்சை யாய் முடிகின்றது. இந்நோயுள்ள சிலருக்கு விரத நியமம் ஏற்படுத்தினாலுமே போதிய தாகக் காணப்படுகின்றது. இவைகளி லிருந்து நாமுணரக்கூடியது எங்கள் தேகநிலை சாந்தமடையின் மனோநிலை சாந்தமடையும். மனோநிலை சாந்த மடையின் ஆன்மா தானே சாந்தமடையும். கோபம் நோய் முதலிய காரணங்களால்

மாத்திரம் உபவாசமிராது, எவரும் கடவுள் தியானத்துடன் உண்டி சுருக்கி உபவாச மிருப்பதனால் உடலுயிராதிய விரண் டிற்கும் நலந்தரத்தக்க நெறியைப் பெற்றவ ராவர். சமய சாஸ்திரங்களிற் சொல்லிய விரத நியமங்களெல்லாம் வைத்திய சாஸ் திரங்கட்கும் பொருத்தமாகவேயிருக் கின்றன. ஆகையால் எச்சமயத்த வரும் தம் சமய குரவர் பெற்றார் ஆகி யோர் பிறந்த கதியடைந்த சுபதினங்களி லாவது உண்டி சுருக்கல், உபவாசமி ருத்தலைக் கைக்கொள்வாராயின் அது அவர்களுடைய தேகலாபத்திற்கும் ஆன்ம லாபத்திற்கும் முக்கிய காரணமாகுமென வறிக.

## இணுவிலைச் சேர்ந்த

## வயலின் வித்துவான் உ. இராதாகிருஷ்ணன்

அவர்களுக்கு

# எமது இதய அஞ்சலி



**மண்ணில் சாதனை படைத்தாய்**

**விண்ணிலும் சாதனை படைப்பாய்**

நிர்வாக சபை

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*

*தெல்லிப்பழை.*

# திருமணச் சடங்கு

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்**

தமிழ் மக்களது வாழ்க்கை நடைமுறையில் பூப்புனித நீராட்டு விழாவுக்கு அடுத்தபடியாகத் திருமணச் சடங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். யாழ்ப்பாணத்திலே ஏறத்தாழ அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய திருமண நடைமுறைகள் பற்றிய அவதானிப்புக்களையே இங்கு குறிப்பிடுகின்றோம். இதற்குச் சான்றாக நாம் கண்டதும், கேட்டதும் அமைகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் இடத்துக்கு இடம், கிராமத்துக்கு கிராமம், சமூகத்துக்குச் சமூகம் திருமண நடைமுறைகளிலே வேறுபாடுகள் இருந்தன. இன்றும் குறைந்த அளவில் இருக்கின்றன.

தமிழ் மக்களின் வாழ்வியலிலே திருமணம் மிகவும் முக்கியமான நிகழ்வாகக் கருதப்பட்டு வந்தது. தற்போதும் கூட அவ்விதமே இருந்து வருகின்றது. திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று கூறும் மரபு இன்றும் உண்டு. சங்ககாலம் எனப்படும் சான்றோர் காலத்திலே நடைபெற்ற திருமண நடைமுறைகளில் பலவற்றை இற்றைக்கு அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே காண முடிந்தது. இலங்கையிலே தமிழர் வாழும் பிரதேசங்களில் எல்லாம் இந்த நடைமுறை சிறிதும் பெரிதுமாக நிலவி வந்தது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்திலே அன்று நிலவிய திருமணங்களை இரண்டு வகையாகப் பகுத்துப் பார்க்கலாம். அவையாவன.

பேச்சுத் திருமணம்
காதல் திருமணம்

இந்த இரண்டு வகைகளும் இன்று வழக்கில் இருக்கின்றன. ஆனால் அன்றைய நடைமுறைகளுக்கும் இன்றைய நடைமுறைகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க பல வேறுபாடுகள் உள்ளன. அவ்வேறுபாடுகள் பற்றி விரிவாக நோக்கலாம்.

**பேச்சுத் திருமணம்**

அன்று நெருங்கிய உறவினர்களுக்குள்ளேயே பேச்சுத்திருமணங்கள் நடைபெறும். பெரும்பாலும் அந்தக் கிராமத்துக்குள்ளே அல்லது ஊருக்குள்ளேதான் பேச்சுத்திரு மணங்கள் நடைபெறும். மிகக் குறைவாக உறவினர்கள் வாழும் பிற ஊர்களிலும் கிராமங்களிலும் பேசித் திருமணம் செய்வது வழக்கமாக இருந்தது. கிராமத்தை, ஊரை விட்டுத் திருமணம் செய்வதைப் பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை.

ஒருவகையில் நையாண்டியாகப் பிற ஊர்த் திருமணங்களை விமர்சிப்பதும் உண்டு. யாழ்ப்பாணத்துக் கிராமங்களிலே இத்தகைய திருமணங்களைப் பற்றி நிலவும் பழமொழிகளும் உண்டு. உதாரணமாகத் 'தூரத்துத் தண்ணி ஆபத்துக்கு உதவாது' என்றும் உழுகின்ற மாடென்றால் உள்ளூரிலே உழுந்தானே என்றும் கூறுவர். முதியவர்கள் பலர் இன்றும் இத்தகைய பழமொழிகளைக் கூறுவதை அவதானிக்கலாம்.

குறிப்பிட்ட வயது வந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் (பெரும்பாலும் மச்சான் – மச்சாளாக இருப்பர்) உறவினர்கள் தாய் – தந்தையரின் வேண்டுகோளுக்கிணங்க திருமணப் பேச்சில் ஈடுபடுவர். (தாய்– தந்தையர் நேரடியாகக் கேட்டு பேசி முடிவெடுப்பதும் உண்டு.) இதனைக் கலியாணப் பேச்சு என்றே அழைப்பர். அந்தக் கிராமத்திலுள்ள சமூக மதிப்புள்ள குடும்ப உறுப்பினர்களே (பெரும்பாலும் மாமா, மாமி, பெரிய – சிறிய தகப்பன், பெரிய – சிறிய தயார் முதலானவர்கள்) திருமணப் பேச்சில் ஈடுபடுவர். சிறுபான்மையாக உறவினர்கள் அல்லாத சமூகப் கணிப்புக்குரிய குடும்ப நண்பர்களும் கலியாணப் பேச்சில் ஈடுபடுவதுண்டு.

யாழ்ப்பாணச் சமூகத்திலே சென்ற நூற்றாண்டின் முற்பகுதி வரை கலியாணப் பேச்சிலே சலவைத் தொழிலாளி, சிகை அலங்கரிப்புத் தொழிலாளி ஆகியோர் ஈடுபடுவதும் உண்டு. இவர்கள் இரண்டு குடும்பங்களையும் இணைத்து வைக்கும் பாலமாக விளங்கினர்.

இன்றுபோலத் திருமணத் தரகர்களோ திருமணம் நிறைவேற்றும் வணிக நோக்க நிறுவனங்களோ அன்று இருந்ததே இல்லை. இன்று திருமணச் சந்தைக் கடைகள் இயங்குவதைக் காலம் செய்த கோலம் என்றே கருத வேண்டும். சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் காரணமாக உருவான திருமணத் தரகு நடைமுறைகள் சமூகவியல் நோக்கிலே தனியாக ஆராயப்பட வேண்டியவை.

அன்றைய யாழ்ப்பாணத்துப் பேச்சுத் திருமணங்களிலே சீதனம் ஓரளவுக்கு இருந்ததுதான். ஆனால் இன்றுபோல் அது இருக்கவில்லை. குடும்ப நிலைவரங்களுக்கு ஏற்ப, தமது வசதிக்கு ஏற்ப சீதனம் கொடுக்கப்பட்டது. கட்டாயப்படுத்திச் சீதனம் தான் பிரதானமானது என்று அன்றைய யாழ்ப்பாணச் சமூகம் கேட்கவில்லை. யாழ்ப்பாணத்துச் சீதன நடைமுறை பற்றி தேசவழமைச் சட்டத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏதோ நகை – நட்டு, காணி – பூமி என்று கூறிக்கொள்ளுவார்கள். இன்று சீதனத்தை அதிகரிக்கச் செய்யும் பணியைப் பெரும்பாலான தரகர்கள் மேற்கொள்வதாகக் கூறப்படுகின்றமையையும் இலகுவாக நிராகரித்துவிட முடியாது.

அன்று யாழ்ப்பாணச் சமூகத்திலே திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படுகின்ற உறவை மாத்திரம் வலியுறுத்தாது, இரண்டு குடும்பங்களுக்கும் இடையே ஏற்படுகின்ற பலமான உறவை வலியுறுத்தியது இதனாலேயே

சீதனம் பற்றிய பிரச்சினைகள் பெரிதுபடுத்தப்பட்டதில்லை எனலாம். பெரும்பாலும் பெற்றோரின் விருப்பத்துக்கு ஏற்பவே பிள்ளைகளின் திருமணம் பேசி நிறைவேற்றப்பட்டது. பிள்ளைகளின் விருப்புக் கேட்கும் மரபு மிகமிகக் குறைவாகவே காணப்பட்டது.

அன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் நடைபெற்ற பேச்சுத் திருமணங்களிலே சாதகப் பொருத்தம் பார்க்கும் மரபு மிகக் குறைவாகவே காணப்பட்டது. இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்திலே சாதகப் பிரச்சினையைப் பெரிதுபடுத்துபவர்கள் திருமணத்தரகர்களே எனலாம். தரகர்களாலும் ஜோதிடர்களாலும் நிறைவேறிய திருமணங்களைக் காட்டிலும் நிறைவேறாமற்போன (குழம்பிப்போன) திருமணங்களே அதிகம் எனலாம். இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்திலே சாதகப் பொருத்தம் மிகமிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இன்றைய ஜோதிடம் குறிப்பிடும் கிரகபாவம் என்ற கணிப்பு ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்னர் முதன்மைப்படுத்தப்படவில்லை. ஜோதிடம் பார்த்த (பொருத்தம் பார்த்த ) சிலருக்கு சில தோஷங்கள் அல்லது குற்றங்கள் (செவ்வாய்க்குற்றம் என்பது போல) இருந்தால் அதற்குப் பரிகாரமாகக் கோயில் வழிபாடு அல்லது நேர்த்தி, விரதம் முதலானவற்றைச் செய்து கொண்டு திருமணத்தை நிறைவேற்றி விடுவார்கள். சில இடங்களில் தமது குல தெய்வங்களுக்கு முன்னாலே பூக்கட்டி வைத்து முடிவை எடுக்கும் வழக்கமும் இருந்தது. பெரும்பாலும் இருவீட்டாரும் இணைந்தே பூக்கட்டி வைத்துப் பார்ப்பது மரபு. பூக்கட்டி வரும் முடிவைத் தெய்வீகத்தின் தீர்ப்பாக ஏற்றுக்கொள்ளுவர். இன்றைய சாதகச் சூழல் பெரும்பாலும் பெண்களையே பாதிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. சாதகமே பாதகமாக அமைந்துள்ளதை இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்திலே காணலாம்.

சாதகம் பார்க்காது மூத்தோரால் தீர்மானிக்கப்பட்ட பேச்சுத் திருமணங்களிலே பெண் பார்க்கும் வழக்கமும் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆண், பெண் இருவரும் ஒருவரை ஒருவர் ஏற்கனவே அறிந்திருக்கும் சந்தர்ப்பங்கள் இயல்பாகவே இருந்தன. (தோட்டம், தண்ணீர் எடுக்கச் செல்லும் இடம், நீராடச் செல்லும் இடம், திருவிழாக்கள், சடங்குகள் முதலியவை) ஒருவரோடு ஒருவர் பழகியிராவிட்டாலும் பார்த்திருக்கும் வாய்ப்புக்கள் இருந்தன.

## சோறு கொடுப்பித்தல் சடங்கு

பேச்சுத் திருமணங்களிலும் இரண்டு பிரதான அம்சங்கள் இருந்தன. மூத்தவர்கள் திருமணத்தைப் பேசி முடிவு செய்ததும் சோறு கொடுப்பித்தல் நடைமுறை மிகவும் சுவாரஸ்யமானது.

சோறு கொடுப்பித்தல் நடைமுறையிலே குடும்பத்து மூத்தவர்களே பிரதானமானவர்களாகக் கருதப்படுவர். சோறு கொடுப்பிப்பதற்கு முன் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று உண்டு உறவாடி மாப்பிள்ளையைக் குளிப்பாட்டிப்

புது வேட்டி சட்டை அணிவித்து பெண் வீட்டிற்கு அழைத்து வருவர். இந்த இடத்திலேதான் தோழன் என அழைக்கப்படும் மைத்துனனின் வகிபாகம் முதன்மைப்படுத்தப்படும்.

பெண்ணைக் குளிப்பாட்டி (அலங்கரித்து) ஏற்கனவே கொடுக்கப்பட்ட புதுச்சேலையைக் கட்டுவித்துத் தயாராக வைத்திருப்பர். மணமகன் பெண் வீட்டிற்கு வந்ததும் இரு வீட்டாரும் விருந்து உண்ணுவர். மணமகனுக்கு மணமகள் தனியாக உணவு பரிமாற்றுவார். மணமகனின் தாய், மாமி முதலியோர் சுவையான உணவு தயாரித்து வைத்திருப்பர். இவ்வாறு வைக்கப்பட்ட உணவைப் பூதாக்கலம் என்று அழைப்பர். பிராமணிய நிலைப்பட்ட திருமணச் சடங்குகளிலும் பூதாக்கலம் என்ற நடைமுறை உண்டு.

பூதாக்கலம் மணமக்களுக்கு என்றே தனியாகச் செய்யப்படுவது. சுமங்கலிப் பெண் (வாழ்வாடிச்சி) முதற்பிள்ளையாக (தலைப்பிள்ளை) ஆண் மகவைப் பெற்ற பெண்ணே பெரும்பாலும் பூதாக்கலத்துக்கான உலையை வைப்பார். மண்மகள் மணமகனுக்கு உணவு பரிமாறிய பின்னர் இருவரும் பள்ளியறையில் ஒன்றாகத் தங்குவர். அத்தோடு திருமண நிகழ்வு நிறைவு பெற்றுவிடும். அடுத்த நாள்கள் உறவினர்கள் பொம்பிளை மாப்பிள்ளையைப் பார்க்க வருவார்கள். (பகலிலே) நான்கு நாள்களுக்குப் பின்னர் மணமக்கள் வசதியான ஒரு நாளிலே கோயில்களுக்குச் செல்வார்கள். பின்னர் உறவினர் வீடுகளுக்குச் செல்வார்கள். பெரும்பாலும் விருந்துக் கொண்டாட்டங்கள் கிட்டத்தட்ட ஒருமாத காலம் வரை நடைபெறும் அன்றைய யாழ்ப்பாணச் சமூகத்திலே மிக எளிமையாக அழகாக நடைபெற்ற திருமண நிகழ்வாகச் சோறு கொடுத்தல் (சோறு கொடுப்பித்தல்) நிகழ்வைக் குறிப்பிட்டலாம்.

சோறு கொடுப்பித்தல் நிகழ்வுக்குச் சற்று வேறுபட்ட விதத்திலே நடைபெற்ற திருமண நடைமுறைகளும் உண்டு பிள்ளையார் பூசை வைத்து பிராமணர் அல்லாத ஊர் அல்லது உறவுப் பெரியவர் ஒருவர் குடும்ப உறவினர் சூழ மணமக்களை ஆசீர்வதித்து தாலியை எடுத்து மணமகனின் கையிலே கொடுத்துப் பெண்ணின் கழுத்திலே கட்டுவிப்பார். அதனையடுத்து பூதாக்கலம் உண்ணல் நடைபெறும். அத்தோடு திருமணம் நிறைவேறிவிடும். பேச்சுத் திருமணம் மற்றும் சோறு கொடுப்பித்தல் சடங்கு ஆகிய இந்த இருவகைத் திருமணங்களிலும் உடனடியாகத் திருமணப் பதிவைச் செய்வதில்லை.

**திருமணப் பதிவு**

உடனடியாகத் திருமணப் பதிவைச் செய்யாதோர் பின்னர் பல்வேறு தேவைகளை ஒட்டி வசதியான நேரத்திலே திருமணப் பதிவுகளைச் செய்து கொள்வார்கள். திருமணம் நடைபெற்று பத்து, இருபது வருடங்களுக்குப் பின்னர் பதிவுத் திருமணம் செய்தவர்களும் இருந்தார்கள்.

**ஓமம் வளர்த்துத் தாலி கட்டும் சடங்கு**

பேச்சுத் திருமணங்களிலே மிகப் பிரதானமானதாகக் கருதப்படுவது பிராமணிய நிலைப்பட்ட ஓமம் வளர்த்துத் தாலி கட்டும் சடங்கே ஆகும். இந்தச் சடங்கு நடைமுறைகளிலும் இடத்துக்கு இடம், சமூகத்துக்குச் சமூகம் சிற்சில வேறுபாடுகள் இருந்த போதிலும் பெரும்பாலான நடைமுறைகள் பொதுத்தன்மை உடையனவாகவே காணப்படுகின்றன. பிராமணியத் திருமணச் சடங்குகளைப் பார்க்கும் பொழுது பாரதி குறிப்பிட்ட "சகுன மந்திரத்தாலி மணியெலாம் யாத்தெனைக் கொலை செய்தனர்" அல்லது "யாதுதர்ம நெறியெனக் காட்டிலர்" என்ற பாடலடியே நினைவுக்கு வரும்.

**சாணைக்கூறை போடுதல்**

இற்றைக்கு அறுபது, எழுபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே நிலவிய திருமண ஒழுங்கு பற்றிய ஒரு செய்தியையும் இந்த இடத்திலே நினைவு கூருவது நன்று. குழந்தைகள் பிறந்த சில நாள்களுக்குள்ளேயே (மைத்துனன், மைத்துனி உறவு) பெரியவர்கள் காலம் வரும் போது இவர்கள் திருமணம் செய்ய வேண்டுமென்று எழுதாத ஒப்பந்தம் செய்வர். இந்தச் சாணைக்கூறை போடப்பட்ட எல்லோரும் பின்னர் திருமணம் செய்வதென்ற நியதியிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் சாணைக்கூறை போடுதல் என்ற பெயரால் அழைத்தனர். சாணைக்கூறை போட்டவர்களுக்கு இடையே திருமணம் நடைபெறாவிட்டால் முரண்பாடுகள் தோன்றிக் குடும்பப் பிரச்சினைகளும் எழுவதுண்டு. இன்று இந்த வழக்காறு முற்றாக மறைந்துவிட்டது.

பேச்சுத் திருமணங்களிலே குடும்ப வசதிக்கேற்ப (பிராமணிய நிலைப்பட்ட) திருமணச்சடங்குகள் மிகவும் ஆடம்பரமாக நிகழ்வதுண்டு. இன்றைய ஆடம்பரங்களுக்கும் அன்றைய (50-60 வருடங்களுக்கு முந்திய ஆடம்பரங்களுக்குமிடையே வேறுபாடுகள் இருந்தன.

**அடக்க திருமணச்சடங்கும் ஆடம்பர திருமணச்சடங்கும்**

பேச்சுத் திருமணங்களிலும் அடக்கமான திருமணச் சடங்கு, ஆடம்பரமான திருமணச் சடங்கு என இரண்டு வகைகள் காணப்பட்டன. தத்தமது வசதிக்கேற்ப மணமக்களின் பெற்றோர் திருமணச் சடங்கு ஒழுங்குகளைத் தீர்மானிப்பர்.

பெரும்பாலும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாணச் சமூகத்தின் மேல் மட்டத்தினர், அதிகார வர்க்கத்தினர், அரச உத்தியோகத்தர்கள் (மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களிலே பணியாற்றியவர்கள்) பிரபல வர்த்தகர்கள், குடாநாட்டுக்கு வெளியே வணிக முயற்சியில் ஈடுபட்ட முதலாளிகள் முதலானோரின் திருமணச்சடங்குகள் பெருமளவுக்கு ஆடம்பரமாக நடைபெற்றமைக்கான சான்றுகள் உள, சமூக மாற்றம், யாழ்ப்பாண மக்கள் இலங்கையில் பல பாகங்களிலும் பரந்து வாழத்தொடங்கியமை, புதிதாக மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கத்தினரின் வாழ்க்கை முறைகள் முதலியவை

திருமணச் சடங்கு முறைமைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வந்தன. ஆடம்பரத் திருமணங்களிலும் சிற்சில நடைமுறைகளிலே வேறுபாடுகள் இருந்தன. புதிதாக உருவாகிய மத்தியதர வர்க்கத்தினரின் திருமணச் சடங்குகள் அதிவிமரிசையாக நடைபெறுவதைப் பாரம்பரிய விழுமியங்களைப் பேணும் யாழ்ப்பாணச் சமூகத்தினர் பெருமளவுக்கு வரவேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமண அழைப்பிதழ்

பழந்தமிழ் இலக்கியங்களிலே எமக்குப் பரிச்சயமான (திருமணத்திருமுகம்) 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப்பின்னர் (அச்சியந்திரத்தின் பயன்பாட்டுடன்) திருமண அழைப்பிதழாகப் பயன்பாட்டுக்கு வருகின்றது. இன்று திருமண அழைப்பிதழ்கள் பல்வேறு வடிவில், பல்வேறு வகையில், பல்வேறு தரத்தில், பெருஞ்செலவில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. 20ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலே அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழ்களிலும் ஒருவித அழகியல் வெளிப்பாடு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தமிழ் அச்சுக்கலை வளர்ச்சியிலே ஈழநாட்டுப் பங்களிப்புப் பற்றி ஆய்வு செய்பவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டு அச்சியந்திரசாலைகளின் செயற்பாடுகள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்)

## சம்பந்தக் கலப்பு

திருமணம் பேசி முடிவு செய்ததும் இரண்டு குடும்பங்களுக்குமான இறுக்கத்தைப் பேணும் வகையிலே சம்பந்தக்கலப்பு என்னும் நிகழ்வு இடம்பெறும், பெண்வீட்டார்தான் முதலிலே மணமகன் வீட்டுக்குச் செல்லவேண்டும். செல்வதே வழக்கம். மங்கலகரமான பொருள்களுடன் (வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம்பழம் முதலானவை) சென்று விருந்துயர்ந்து திரும்புவர். சில இடங்களில் கொழுக்கட்டை அவித்துக் கொண்டு செல்வதும் உண்டு. இரண்டு குடும்பங்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன், விட்டுக்கொடுப்புடன் பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் நிகழ்வாகச் சம்மந்தக்கலப்பு அமையும் எனலாம்.

## பொன் உருக்கல்

திருமணநாள் குறிக்கப்பட்டதும் (முகூர்த்தம்) பொன் உருக்கல் என்ற நிகழ்வு முக்கியம் பெறும். பொன்னுருக்கும் நிகழ்வு நல்லதொரு நாளில் (பஞ்சாங்கத்திலே உள்ளபடி) மணமகன் வீட்டிலேதான் இடம்பெறும். பொன் உருக்குவதற்குப் பொற்கொல்லர் ஒருவர் அதற்குரிய உபகரணங்களுடன் மணமகன் வீட்டுக்கு வருகைதந்து பொன் உருக்கலுக்கான சடங்காசாரங்களின்படி பொன்னை உருக்குவார். மணமகளின் பெற்றோர்களும் நெருங்கிய உறவினர்களும் பொன்னுருக்கற் சடங்கிலே கலந்து கொண்டு விருந்துயர்ந்து செல்வர். பொன்னுருக்கல் நிகழ்வு நடைபெற்ற பின் மணமக்கள் திருமணம் வரை ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடாது என்பது வழக்கமாகும். (இன்று இந்த நடைமுறை பெரிதும் பின்பற்றப்படுவதில்லை)

## திருமணச் சடங்கு

அந்தக் காலத்திலே திருமணச் சடங்குகள் இரவிலேயே நடைபெற்றன. முகூர்த்த நேரமும் பெரும்பாலும் இரவாகவே இருக்கும். பஞ்சாங்கங்களும் இரவு நேரத்திலேதான் முகூர்த்தத்தைக் குறிப்பிட்டிருக்கும். திருமணங்களை ஆடம்பரமாக நடத்துவதற்கு இரவு நேரம் பொருத்தமானதெனக் கருதப்பட்டது. ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் இரவிலே திருமணச் சடங்குகள் நடைபெறவில்லை. திருமணங்கள் பகலிலேயே நடைபெற்றன. நடைபெறுகின்றன. இந்த விடயத்தைக் குறிப்பிடும்போது போர்க்கால யாழ்ப்பாணச் சூழ்நிலை பற்றிய பாடல் ஒன்றை நினைவு கூரலாம்.

**கோயில் விழா கொண்டாட்டம் எல்லாம் பொழுது**
**சாய்வதற்கு முன்னே நிறைவுபெறும் தூயநிலா**
**உண்டு மகிழ்ந்து கலந்து உறவாடி**
**உண்ட நிகழ்வேங்கே உரை**

பெரும்பாலான திருமணங்கள் வீடுகளிலேயே நடைபெற்றன. சில திருமணங்கள் கோயில்களில் நடைபெற்றதும் உண்டு. தற்காலத்திலே திருமண மண்டபங்களிலேதான் திருமணங்கள் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்திலே இன்று திருமண மண்டபங்கள் பல உள்ளன. ஆனால் நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னர் திருமண மண்டபங்களே யாழ்ப்பாணத்தில் இருந்ததில்லை. எத்தகைய ஆடம்பரத் திருமணமாக இருந்தாலும் அது வீட்டிலேயே நடைபெற்றது. பெரிய பந்தல்கள் போட்டு வெள்ளை கட்டி, அலங்காரங்கள் செய்து, மணவறை அமைத்துத் திருமணச் சடங்குகளை நடத்துவர். திருமணச் சடங்கின் பிரதான விடயங்கள் பெண் வீட்டிலேயேதான் நிகழும், தாலிகட்டி அம்மி மிதித்து அருந்ததி காட்டிக் கால் மாறுதல் என்னும் நிகழ்வு இடம்பெறும். திருமணச் சடங்கு முறைமைகள் இடத்துக்கு இடம், கிராமத்துக்குக் கிராமம், சமூகத்துக்கு சமூகம் வேறுபட்டு நிகழும், அதனாலே அந்த முறைகள் பற்றி விரிவாகக் குறிப்பிடாது விடுத்தோம். ஆனால் பொதுவாக ஆடம்பரத் திருமணங்களிலே மங்கல வாத்தியம், ஊர்வலம் என்பன இடம்பெறும். இரவு நேரமாகையால் ஊர்வலம் அமையும். திருமணமாகாத பெண்ணொருவர் தமது தந்தையார் இறந்த போது புலம்புவதாக அமைந்த கவிஞர் எம்.வீ. கிருஸ்ணாழ்வாரின் பாடலொன்றை இந்த இடத்திலே சுட்டுவது பொருத்தமாக இருக்கும்.

**சோதிபெற நன்றாகச் சோடித்த காரேறி**
**வீதிவரும் பவனி மேதினியிற் காணாமல்**
**காதிற் பறைகேட்கக் கட்டியபூம் பாடையில்**
**நீதியின்றிப் போய் மறைந்தாய்**
**முறையோ என் ஐயாவே**

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே ஆடம்பரத் திருமணங்களிலே பலவகையான ஊர்வலங்கள் இருந்தன என்பதற்கு இந்தப் பாடல் சான்றாகும்.

## அறுகரிசி போடுதல்

திருமணச் சடங்குகள் முறையாக நடைபெற்ற பின்னர் வாழ்த்துதல் என்ற அம்சம் பிரதானமானதும் இன்றும் இந்த வழக்கம் உண்டு. அறுகரிசி போடுதல் என்று இதனைக் கூறுவர். இதனைவிட வாழ்த்துப்பாக்கள் பாடும் வழக்கமும் இருந்தது. வாழ்த்துப்பாடலை எழுதி அச்சிட்டுக் கண்ணாடிச் சட்டத்தினுள் போட்டு மணமக்களுக்கு வழங்குவர். இன்றும் இந்த வழக்கம் உண்டு. இந்த வழக்கம் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னரே பரவலாகியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வாழ்த்துப்பா

அந்தக்காலம் புலமையாளர்கள் பலர் சிறப்பான வாழ்த்துப்பாக்களைப் பாடியுள்ளனர். வாழ்த்துப்பாவுக்கான முறையியல் ஒன்றும் யாழ்ப்பாணத்திலே நிலவியது என்பதற்கு அந்தக்கால வாழ்த்துமடல்கள் சான்றாகும். ஈழகேசரி பொன்னையாவின் மகளின் திருமணத்துக்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வாழ்த்துப்பா பாடினார். அந்த வாழ்த்துப்பா பின்னர் ஈழகேசரிப் பத்திரிகையிலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. பிராமணிய நடைமுறைகளின் படி (ஆகம முறைப்படி) நடைபெறும் திருமணங்களை நெறிப்படுத்து பவர்களாக ஒளிப்படக் கலைஞர்களே (வீடியோ உட்பட) செயற்படுவதை இன்று அவதானிக்கலாம். ஆனால் இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் (50கள் 60களிற் கூட) சலவை சவரத் தொழிலாளர்களே திருமண நடைமுறைகளை ஒழுங்கு படுத்துபவர்களாக விளங்கினர். இன்று அந்த முறை முற்றாக மறைந்து விட்டது. நாமும் மறந்து விட்டோம்.

## நாலாஞ் சடங்கு

திருமணம் நிறைவுபெற்று (தாலிகட்டல், விருந்து முதலியன) மணமகள், மணமகன் வீட்டிலேதான் தங்குவார். மூன்று நாள்கள் மணமகன் வீட்டிலே தங்கி நான்காம் நாள் பெண் வீட்டுக்கு (தமது) வந்து சேருவர். பெண்வீட்டுக்கு வரும் நான்காவது நாளில் நாலாஞ்சடங்கு என்னும் சடங்கு வெகுவிமரிசையாக நடைபெறும். பெரும்பாலும் மாமிசபோசனம், மது வகைகள் முக்கியமாக இடம்பெறும். நாலாஞ்சடங்கு என்ற கொண்டாட்டம் மணமகள் வீட்டிலேயும் மணமகன் வீட்டிலேயும் நடைபெறும். பெரும்பாலும் மணமகன் வீட்டிலேயே சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இன்றும் இந்த வழக்கம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

## நாட்கடை

நாலாஞ்சடங்கின் பின்னர் மணமக்கள் கோயில்களுக்குச் சென்று வழிபாடியியற்றுவர். பின்னர் நல்லதொரு நாளிலே நாட்கடை என்ற நடைமுறையின்படி மணமக்கள் கடைக்குச் சென்று புதுப்பானை, சட்டி, உப்பு, மஞ்சள் முதலான பொருள்களை வாங்கி வருவர். அதன் பின்னர் புதுக்குடித்தனம் தொடங்கும்.

திருமண நடைமுறைகள் இன்று வாய்ப்பு வசதிக்கேற்ப மாற்றம் பெற்றுள்ளமையைக் குறிப்பிட வேண்டும்.

## காதல் திருமணம்

யாழ்ப்பாணத்துத் திருமண நடைமுறைகளிலே காதல் திருமணம் ஓரளவுக்கு இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பழந்தமிழ் மக்களின் அகத்திணை மரபிலே இடம்பெற்ற உடன் போக்கு இங்கும் நடைபெற்றுள்ளது. காதல் திருமணங்களை (உடன்போக்கை) கூடிக்கொண்டோடுதல் அல்லது கூட்டிக்கொண்டோடுதல் என்ற தொடர்களாலேயும் அழைத்தனர். உடன்போக்கு நிகழ்ந்தால் பெண்ணையும் பெண்வீட்டாரையுமே பெருமளவுக்கு விமர்சிப்பார்கள். யாழ்ப்பாணத்தில் வழங்கும் பல நாட்டுப் பாடல்கள் இந்தக் கருத்தையே காட்டி நிற்கின்றன.

**தையலியாரிடை மையலிலே - எங்கள்**
**தாண்டவி அண்ணனும் பூண்டுவிட்டார்**
**சீதனமும் வேண்டாம் ஆதனமும் வேண்டாம்**
**சிங்கார நாச்சியைக் கண்டாலே போதும்**

என்றும் வழங்குவதைச் சுட்டிக்காட்டலாம். அன்று காதல் திருமணங்களை வரவேற்காமைக்கு யாழ்ப்பாண சமூகத்தின் கட்டிறுக்கமே பிரதான காரணம் எனலாம்.

*நன்றி : உதயன் புதன் பொய்கை*
*– 09/09,16/09/ 2015 நாளிதழ்கள்.*

### சால்பு

மனம், மொழி, மெய் மூன்றையும் அடக்கி ஆண்டு எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புடையவனாய் அவாவையும் சினத்தையும் நீக்குகிறவனே சால்பு அடைவான்.

**( மனு )**

சால்புடையவன் அருளுடையன், எந்த உயிர்க்கும் தீங்கு செய்யான், பொறையுடையன், உண்மையன், மாசற்ற மனத்தினன், எல்லோரையும் சமமாக எண்ணுபவன், எல்லோர்க்கும் உதவுபவன்.

**( விஷ்ணுபுராணம் )**

# எல்லா உலகும் பெறும்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஒரு பொருளுக்குப் பெருமை அப்பொருளின் உயர்வாகிய தனித் தன்மையில் இல்லை. அப்பொருளைக் கொடுப்பவனுடைய அன்பின் அருமையில் உயர்வு அடங்கியுள்ளது.

நெய்யினால் தாளிதம் புரிந்து, பளபளவென்று பூனைக்கண் போல் நிறமுள்ள உயர்ந்த உணவாக இருப்பினும் அன்பில்லாதவன் மனையில் ஒரு ஒதுக்கிடத்தில் இருந்து உண்ணும் உணவு வேம்புபோல் கசக்கும்.

"விருப்பிலா இல்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்கண் வெங்கருணை வேம்பாம்"

என்று கூறுகின்றது நாலடியார்.

அன்பில்லாமல் தருகின்ற பொருள் எத்துணை உயர்ந்ததாயினும் அது உயர்வு பெறாது. அன்புடன் தந்த உப்பில்லாத கஞ்சி அன்பின் மிகுதியால் அமிர்தமாகத் தித்திக்கும்.

சபரி என்ற வேடர்குல நரை மூதாட்டி தந்த எச்சிற்கனி இராமருக்கு அமிர்தம் போல் இருந்தது. அன்பின் சிகரமாக விளங்கிய கண்ணப்பர் தந்த எச்சில் மாமிசத்துண்டு, சிவபிரானுக்குப் புதிய அமிர்தம் போலிருந்தது.

"கிஞ்சித் பக்ஷித மாம்சசேஷ கபளம்
நிவயோப ஹாராயதே"

*– சிவானந்த லஹரி –*

இவைகளுக்கெல்லாம் காரணம் எது? அன்புதான்

ஔவையார் ஒரு சமயம் நடந்து பலவூர்களுக்குச் சென்று அறவுரை பகர்ந்து வந்தனர். அக்காலத்தில் இந்நாளில் உள்ள வாகன வசதிகள் இல்லை. அதனால் தமிழ் அன்னையாகிய ஔவையார் காலால் நடந்தே ஆங்காங்குச் சென்று அரிய பணிகள் பல புரிந்து வந்தனர்.

ஒரு நாள் பகலெல்லாம் நடந்தனர். பொழுது சாய்ந்தது. கால்கள் தடுமாறின, கடும்பசி இருள் சூழ்ந்துவிட்டது. எங்கு போவது என்று அம்மையாருக்கு விளங்கவில்லை.

தற்செயலாக எதிரில் ஒரு குடிசை இருந்தது, புல்வேளுர் என்ற ஊர்ப்புறத்தே அக்குடிசை இருந்தது, அதில் பூதன் என்ற விவசாயி இருந்தான். நல்ல பண்புடையவன், விருந்தினரை உபசரிப்பதில் வல்லவன் கருணையால் கனிந்த உள்ள முடையவன் அவனுடைய வாழ்க்கைத் துணைவியான மனைவியும் அவ்வண்ணமே அறப்பண்புடையவள். கணவனார் கருத்தறிந்து நடப்பவள்.

ஔவையார் அந்தக் குடிசையின் அருகே களைத்து நின்று 'முருகா' என்ற ஒரு பெருமூச்சு விட்டனர்.

குடிசைக்குள் இருந்த பூதன் என்பவன் 'முருகா' என்ற குரலைக் கேட்டு விளக்கை

யேந்திக் கொண்டு வெளியே வந்து பார்த்தான். பழுத்த பழமாக ஒரு கிழவி இருப்பதைக் கண்டான். ஔவையாரென அவன் அறிந்தானில்லை. 'பாட்டி! தாங்கள் பசித்திருக்கிறாப்போல் தோன்றுகிறது! உள்ளே வந்து எம்மிடம் உள்ளதை உண்டு பசியாறுங்கள்" என்று அன்புடன் அழைத்தான்.

ஔவையார் குடிசைக்குள் நுழைந்தார். கிழிந்த பாய் ஒன்றை இவருக்கு இட்டு அதில் அமருமாறு பூதனுடைய மனைவி உபசரித்தாள். கையலம்ப நீரும் தந்தாள். வாழையிலை இட்டாள். பகற்பொழுதில் சமைத்த வரகரிசி அன்னத்தைப் படைத்தாள். அது விறகுபோல் விறைத்துப் போயிருந்தது.

"தாயே! நாங்கள் பரம ஏழைகள், எங்கள் வீட்டில் பாலோ, தேனோ, பழமோ, உயர்ந்த பிற உணவோ இல்லை. இந்த வரகரிசிச் சோறுதான் இருக்கின்றது. இதனை உண்டு பழகியிருக்க மாட்டீர்" என்று அந்த வீட்டரசி இனிமையாகக் கூறினாள்.

ஔவையார், "குழந்தாய்! வீடு தீப்பிடித்து எரியுமானால் பன்னீர் விட்டுத்தான் அணைக்க வேண்டுமா? தண்ணீர் விட்டால் தீ அணையாதா? அதுபோல் வயிற்றில் எழுகின்ற பசித் தீ, பாதாம் அல்வாவினால்தான் அணையுமா? பழங்கஞ்சி உண்டாலும் அணையுந்தானே? ஆகவே ஏதாவது தாருங்கள்" என்றார்.

**பாட்டிக்கு உபசரிப்பு**

இலையில் படைத்த வரகரிசிச் சோற்றில், மூன்று நாட்களுக்கு முன் கடைந்த நுரையுடன் புளித்து இருக்கின்ற மோரை விடுத்தாள்.

துணைக்கறி யாதொன்றும் இல்லை. வீட்டம்மை என் செய்வோம் என்று கருதினாள். நீளமான கத்தரிக்காய்க்கு வழுதுணங்காய் என்று பேர். தோட்டத்திலிருந்து இரண்டு வழுதுணங்காய்களைப் பறித்து அடுப்பில் நன்கு கனிந்துள்ள நெருப்பில் இட்டு வாட்டினாள். வாட்டிய வற்றை ஒரு பாத்திரத்தில் இட்டுத் தூய மெல்லிய கரமலரால் பிசைந்தாள். சிறிது உப்பிட்டு, அரை எலுமிச்சம்பழம் பிழிந்து, ஈர வெங்காயத்தைச் சிறிது நசுக்கி விட்டாள். பச்சை மிளகாய் ஒன்றும் நசுக்கி யிட்டாள். சிறிது காயத்தையும் கரைத்தாள். கரண்டியில் சிறிது நல் லெண்ணெயிட்டு கடுகும் கருவேப்பிலை யும் உளுத்தம் பருப்பும் இட்டுத் தாளிதஞ் செய்து அதில் கலந்து பச்சைக் கொத்து மல்லித் தழையையும் அதில் இட்டு விரவினாள்.

இப்படிச் சில வினாடிக்குள் தயாரித்த அக்கறியை ஔவையார் இலையில் சூடாகப் படைத்தாள். பூதன் அருகில் நின்று கிழிந்த பனை ஓலை விசிறியால் விசிறினான். "எங்கள் புண்ணியப் பயனால் வந்த தண்ணருள் நிறைந்த தாயே! தங்கள் வரவினால் நாங்கள் புனிதர்களாக ஆனோம். நாங்கள் பெருந் தவமுடையோம். தங்கள் வரவு நல்வரவு. தாங்கள் உண்டது கோடி பேர் உண்டதாகும். தங்களை கண்ட கண்கள் நல்ல கண்கள், எங்கள் குடிசை என்ன மாதவஞ் செய்ததோ? என்றான்.

பூதன் மனைவி, "பாட்டி! இந்தப் புல்லிய உணவைத் தங்களுக்குப் படைத்தற்கு உள்ளம் நாணுகிறது. தங்களைப் பார்த்தால் மிகப் பெரிய தகுதியுடையவரென்று தெரிகிறது. உங்கள் திருமுகத்தில் ஞான ஒளி வீசுகின்றது. தங்களுக்குப் பாலும்,

தேனும், பழமும், சீனியும் படைக்க வேணும். நாங்கள் வறியவர்கள். எங்கள் வீட்டில் இவைகள்தான் இருந்தன. சோறும் வரகரிசி, மோரும் புளித்தது, உயர்ந்த கறிகளும் இல்லை. என்னவோ நீங்கள் இவற்றை ஏற்றுக் கொண்டு உண்பதுவே நாங்கள் செய்த மாதவம்" என்றாள்.

இப்படிக் கணவனும் மனைவியும் இன்னுரை கூறிப் படைத்த அந்த உணவை அன்பாகவும் அமிர்தமாகவும் ஔவையார் உண்டார். உண்டபின் கை அலம்பி, பாயில் அமர்ந்து இந்த உணவு எல்லா உலகும் பெறும் என்று ஓர் அருமையான வெண்பாவைப் பாடினார்கள். பாட்டைக் கேட்ட பின்னர், அவரை ஔவையார் என உணர்ந்து மேலும் பயபக்தியுடன் உபசரித்தார்கள்.

அந்த வெண்பாவை இதோ பாருங்கள்.

**"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**
**முரமுரவென வேபுளித்த மோரும் – திறமுடனே**
**புலவேளூர்ப் பூதன் புகழ்ந்து பரிந் திட்டசோ**
**றெல்லா உலகும் பெறும்"**

ஔவையார் இப்படி அன்புடன் அளித்த அந்த சிறுமையான உணவைப் பெருமையாக மதித்துப் பாடினார்கள். அந்த உணவு எல்லா உலகும் பெறும் என்றும் கூறினார்கள். ஆனால் உண்மையில் இந்தப் பாடல் எல்லா உலகும் பெறும்.

*நன்றி*

**"வாரியார் வழங்கும்**
**சிந்தனைச் செல்வம்"**

## அவா

மெய்யுளே விளக்கை ஏற்றி
வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி
உகக்கின்றேன், உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர்
அவர்களே வலியர் சாலச்
செய்வதொன் றறிய மாட்டேன்
திருப்புக லூர னீரே.

புள்ளுவர் ஐவர் கள்வர்
புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறைக் கொள்வர்
தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை
முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங்கு
உணர்வினால் எய்ய லாமோ.

**- திருநாவுக்கரசர்**

# தீண்டாதார் யார்?

அமரர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

உலகம் அவைதிகத்தின் கூட்டமா யிருக்கின்றது. இங்கே உலகம் என்றது கலிகால உலகம்.

'வித்' என்பதிலிருந்து பிறந்தது வேதம். 'வித்' – அறிவு. வேதம் என்பதிலிருந்து பிறந்தது வைதிகம். வைதிகம் அறிவு உலகம். அறிவு உலகத்துக்கு எதிரான உலகம் அவைதிகம். ந + வைதிகம் = அவைதிகம்.

அவைதிக உலகம், அறியாமை உலகமும், அருமந்த உலகைப் பாழ் செய்யும் உலகமும் என இருவகைப்படும். அறியாமை உலகம் மனிதனாய்ப் பிறந்தும் விலங்காய் உழலும் உலகம். அறிவைப் பாழ் செய்யும் உலகம் இன்றைய விஞ்ஞான உலகம்.

ஒரு சித்தன் தன் அறிவை – விவேகத்தை – விலைபேசி விற்பதில்லை. அணுக்குண்டு செய்து, அதனைக்காட்டி, அதற்கு உலக சமாதான தரும சக்கரம் என்று பெயரிட்டுத் தன்னையும் உலகையும் ஒரு சித்த புருஷன் வஞ்சிப்பதில்லை. அருமந்த அறிவைவஞ்சம் என்கின்ற சொல் அறியாமற் பாதுகாத்துப், பொல்லாத பிரபஞ்சத்தை அஞ்சி அஞ்சி அதனைத் தீண்டாதே வாழ வழி தேடி, ஒதுங்கும் உலகம் ஒன்று உளதானால் அதுவே வைதிக உலகம்.

அறிவைப் பேணுகிற முறையில் பேணும் உலகம் எதுவோ அது வைதிக உலகம். வைதிக உலகத்திலே வேத நெறிகள் என்கின்ற தருக்கள் தழைத்துச் செழித்து வளர்ந்து ஓங்கும். தருமம் என்ற ஆறுகள் ஓடி வழி செய்யும் சுவதர்மம் விளங்கிய உலகம் வைதிக உலகம்.

வைதிக உலகம் அவைதிக உலகத்தைத் தீண்டாது, தீண்டக்கூசும். தீண்டாமை, தனக்குச் சித்திக்க வேண்டுமென்று செய்யுந் தவமே வைதிக உலகம் செய்யுந்தவம்.

அவைதிகத்தைத் தீண்டாமை பூரணப் படுமானால், வைதிக உலகம் வேதநெறி கைவந்து மற்றொரு உலகமாய் மாறி விடும். அந்த உலகத்துக்குச் சத்திநிபாத உலகம் என்பது பெயர்.

வைதிக உலகம் அரும்பு ஆனால். சத்திநிபாத உலகம் மலர். நிபாதம் – பதிதல். சத்தி – திருவருள். சத்தி நிபாதர் ஆவார் திருவருள் பதியப் பெற்றவர். திருவருள் வழியில் நடப்பவர், சரீரத்தையும் அந்தக் கரணங்களையும் ஒப்பித்தவர்.

சத்தி நிபாதருக்கு மற்றொரு பெயர் சைவர். சைவராவார், சிவசம் பந்தம் பெற்றவர்.

சத்திநிபாதம் காய் ஆனால், சைவம் கனி. சத்திநிபாதந்தானே சைவம் எனினும் அமையும். வைதிகன் சத்திநிபாதனாய்ச் சைவனாதல் வேண்டும்.

சைவன் ஒருவன் இந்த உலகில் இருப் பான் ஆனால், அவனே பரி பூரணமான தீண்டாதான். அவன், அறியாமை– வஞ்

சத்தைத் – தீண்டுவதில்லை. அவன் அக்கினியை வளர்த்துக்கொண்டு வஞ்சத்தையும் அறியாமையையும் சாம்பர் செய்தபடி யிருப்பான்.

தீண்டாதானாகிய சைவனே, சிவாலயத்தைச் – சிவசந்நிதியை – அணுகுவதற்கு உரியவன். சிவசந்நிதியை அணுகுதற்குரியவன் எவனோ அவன் சைவன். சிவ சந்நிதியை அணுகியவர்கள் சாதி குலம் பிறப்புக்களை வென்றவர்கள் அவற்றாற் பந்திக்கப்படாதவர்கள். மாயா சம்பந்தமும், நல்வினை தீவினையாகிய கர்ம சம்பந்தமும் அவர்களைப் பந்தஞ் செய்வதில்லை. அதனாலே பிறப்பாலெய்திய சாதி வேற்றுமை சைவத்தில் இல்லை. சைவருக்கு "ஒன்றே குலம்". தில்லைவாழந் தணரும் திருநீலகண்டத்துக் குயவனாரும் ஒரு குலத்தினர். அந்தக்குலம் சைவகுலம்.

சைவத்தின் முந்தியநிலை வைதிகம். வைதிகர் உலகத் தொடர்பை முற்றும் விடமாட்டாமையினாலே, சிவசம்பந்தம் பெறுதற்குச் சிவ சந்நிதியை அணுகுதற்குரிய சத்திநிபாதம் பூரணப்படாமையினாலே வெளிவீதியிலே தவித்துக்கொண்டு நிற்பவர். அப்படி நிற்கும் வைதிகருக்குச் சாதி வேற்றுமை உண்டு. வருணாசிரம தருமம் வைதிகத்தின் உயிர்நாடி. தம் குறையை அறிந்து தம்மைப் பேணுதற்கு வழி செய்வது வருணாசிரம தருமம்.

விதுரர் வில்லை முறித்துவிட்டு வஞ்ச உலகத்துக்கு அஞ்சிக் காட்டுக்கு ஓடினார். அங்கே ஒரு முறை பாண்டவர்கள் அவரைக் கண்டு அவரைத் தொடர்ந்தார்கள். அவர் அவர்களைக் கூடப் பார்க்கக்கூசி வெகு வேகமாக ஓடினார். பாண்டவர் களால்தொடர முடியவில்லை. தருமர் மாத்திரம் தம் பெயரைச் சொல்லிக் கொண்டு, விதுரரைத் தொடர்ந்தார். விதுரர் ஒரு மரநிழலில் அம்மரக் கொம்பைப் பற்றிக்கொண்டு சற்றே நின்றார். தருமர் ஓடிப்போய் அவர் பாதத்தில் வீழ்ந்தார். தருமர் அவர் பாதத்தைத் தீண்டமுன்னமே விதுரர் தாம் தீண்டுதற்குரியதைத் தீண்டி விட்டார். தருமர் விதுரரின் வெற்றுப் படலையே தீண்டியவர் ஆனார்.

எவன் பிழையுலகைத் தீண்டானோ, அவனை அப்பிழையுலகமுந் தீண்டாது. தீண்டமாட்டாது என்பது ஒரு மறைநெறி.

தருமராலும் தீண்டுதற்கு எட்டாதவர் ஆனார் விதுரர். தீண்டாதானான சைவன் ஆசனந் தெரிந்தவன். அதாவது இருக்கத் தெரிந்தவன். அவனுக்கு "யாதும் ஊரே". ஆனால் அவனை ஊர் தீண்ட மாட்டாது. அவனும் ஊரைத்தீண்டுவதில்லை.

ஆகவே, தீண்டாதானே பரிபூரண சைவன். சிவசந்நிதிக்குரியவன். தீண்டாதாரெல்லாருக்கும் "ஒன்றே குலம்" அவருக்கு "ஒருவனே தேவன்".

வைதிகர்கள் வெளிவீதியில் நிற்ப வர்கள். அவர்கள் பல்வேறு குலத்தவர்கள். வருணாசிரம தரும வழிநின்று உலகை விட முயல்பவர்கள். அவர் பல்வேறு தெய்வங்கள்மூலம் ஒரு தேவனை வழிபட முயல்கின்றார்கள்.

அப்பால், அவைதிக உலகம். அதற்கும் கோயில் வீதிக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அவைதிக உலகத்தை வைதிக உலகம் ஆக்குவதற்கு வழி காண்பதே நீதி. அது சிந்திக்கற்பாலது.

வைதிக உலகம் தீண்டுகிற உலகம். அதற்கு மேலே உள்ளது சைவ உலகம். அது தீண்டாதார் உலகம். மேன்மைகொள் சைவநீதி விளங்குகிற உலகம் அந்த உலகம்.

ஒருவன் தான் ஒரு தீண்டாதான் ஆதற்குத் தவங்கிடப்பானாக.

அவன் எப்பொழுது, திண்டாதான் ஆகிறானோ, அவனை அப்பொழுதே தீயவை தீண்டா. தீண்டாதானை ஒரு 'ஜோதி' – ஒரே 'ஜோதி' – மாத்திரந் தீண்டும்.

அது
பரம ஆத்ம ஜோதி.

## எது மதிப்புடையது?

பல நாடுகளைத் தன் ஆட்சியின்கீழ் வைத்திருந்த ஒரு பேரரசர். அவருக்கு ஆலோசனைகள் கூற பல மந்திரிகள் இருந்தனர். அரசருக்குப் பணிவிடை செய்ய சேவகன் ஒருவன் இருந்தான். அரசர் அந்தச் சேவகனிடம் அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். அரசர் சேவகனிடம் கொண்ட அன்பைச் சகிக்காத மந்திரிகள் அவன்மேல் பொறாமை கொண்டார்கள்.

அறிவுக்கரிய பல ஆலோசனைகள் கூறும் நம்மிடம் காட்டாத அன்பை, ஒரு சேவகனிடம் போய் அரசர் காட்டுகிறாரே என்ற எரிச்சலும் அவர்களுக்குள் இருந்தது. மந்திரிகள் இவ்வாறு பொறாமைப்படுவது அரசருக்குத் தெரியவந்தது. மந்திரிகளுக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்று அரசர் திட்டமிட்டார். அரசவையைக் கூட்டினார். அவைக்கு மந்திரிகள் அனைவரும் வந்திருந்தனர்.

அரசரின் சிம்மாசனத்துக்கு முன்பாக மிகவும் விலை உயர்ந்த ஓர் இரத்தினக் கல்லும், ஒரு சுத்தியலும் வைக்கப்பட்டிருந்தது. அரசர் தமது முதல் மந்திரியை அழைத்தார். அரசர் அவரிடம் அந்தச் சுத்தியலை எடுத்து பெரும் மதிப்புள்ள இரத்தினக்கல்லை உடையுங்கள் என்றார். முதல் மந்திரி விலைமதிப்பற்ற இரத்தினக்கல்லை உடைத்தால் அது பயனில்லாமல் போய்விடுமே? என்று யோசித்தபடி அப்படியே நின்று விட்டார். அரசர் அவரை அவரது இருக்கைக்குச் செல்லும்படி சொன்னார். முதல் மந்திரியும் அவர் இருக்கையில் சென்று அமர்ந்தார்.

அரசர் அடுத்த மந்திரியை அழைத்து இரத்தினக் கல்லை உடைக்கக் கட்டளையிட்டார். முதல் மந்திரியே இரத்தினக் கல்லை உடைக்காத போது அவர் உடைப்பாரா? அவரும் உடைக்காமல் திரும்பிவிட்டார். இப்படியே அரசவையிலிருந்த மந்திரிகள் எவரும் அந்த இரத்தினக் கல்லை உடைக்கத் துணியவில்லை. எல்லோருடைய சிந்தனையிலும் அந்த இரத்தினக் கல்லின் மதிப்பே முதன்மையாகத் தெரிந்தது. இறுதியாக அரசர் தனது சேவகனை அழைத்து இரத்தினக்கல்லை உடைக்கும் படி கட்டளையிட்டார்.

அரசரின் வாயிலிருந்து கட்டளை பிறந்தவுடன் அவன் எவ்வித்த் தயக்கமுமின்றி சுத்தியலை எடுத்து இரத்தினக்கல்லை உடைத்தான். இதைப் பார்த்த மந்திரகள் அனைவரும் அட முட்டாளே! விலைமதிப்புள்ள இரத்தினக்கல்லை இப்படி உடைத்து வீணாக்கி விட்டாயே? என்று சத்தம் போட்டனர். அந்தச் சேவகன் எவ்வித பதட்டமுமில்லாமல் மந்திரிகளே தாங்கள் விலைமதிப்புள்ள இரத்தினக்கல்லை உடைத்ததைப் பார்த்து அது வீணாகிப் போய்விட்டதே என்று கவலைப்படுகிறீர்கள்.. நான் அப்படியில்லை இந்த இரத்தினக்கல்லை விட நம் அரசரின் சொல்லையே மதிப்புள்ளதாக நினைக்கிறேன். அவர் எதைச் சொன்னாலும் அதைச் செய்வதே என்னுடைய பணி என்றான். அரசன் மந்திரிகளைப் பார்த்து பார்த்தீர்களா..! இதனால்த்தான் இவன்மேல் எனக்கு அன்பு அதிகம்.. உண்மைச் சேவகனுக்கு இதுவே அழகு.

**– நன்றி – ஞானச்சுடர்**

# நவராத்திரி கொலு பொம்மைகள் தயாரிப்புப் பணி தீவிரம்


காஞ்சிபுரத்தில் நவராத்திரி கொலு பொம்மைகள் தயாரிப்புப் பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் நவராத்திரி என்றும் வட மாநிலங்களில் தசரா பண்டிகை என்றும் நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படும். நவராத்திரி திருவிழா வருகிற அக்டோபர் 13ஆம் தேதி தொடங்க உள்ளது. இந்தத் திருவிழாவின்போது வீடுகளில் கொலு மாடம் அமைத்து முப்பெரும் தேவியரை வழிபடுவது வழக்கம். கொலு மாடத்தில் இஷ்ட தெய்வங்களுடன் பல வகையிலான பொம்மைகள் வைத்து வழிபாடு நடத்தப்படுவது வழக்கம். இந்த விழாவுக்காக கொலு பொம்மைகள் தயாரிக்கும் பணி காஞ்சிபுரத்தில்200 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது. சின்ன காஞ்சிபுரத்தில் பொம்மைகாரர் தெரு (அஸ்திகிரி தெரு) பெரியார் நகர். முத்தியால்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் செய்யப்படுகிறது. ராமர் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் பொம்மை செட்டு தசாவாதார செட் வாஸ்து லட்சுமி. அதிகார நந்தி மதுரை கள்ளழகர் மீனாட்சி. காமாட்சி செட் பள்ளி மாணவ மாணவிகள் என 500க்கும் மேற்பட்ட விதவிதமான பொம்மைகள் அழகழகாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

இங்கு தயாரிக்கப்படும் பொம்மைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மட்டுமன்றி கர்நாடகம், ஆந்திரம். கேரளம், வடமாநிலங்கள் அமெரிக்கா, மலேசியா, ஜேர்மன், சிங்கப்பூர், இத்தாலி உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. காஞ்சிபுரத்தில் தயாராகும் பட்டுப்புடவைகளுக்கு வெளிநாடுகளில் இருக்கும் அதே வரவேற்பு கொலு பொம்மைகளுக்கும் உள்ளது.

இது குறித்து கடந்த 4 தலைமுறையாக பொம்மை தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தைச் சேர்ந்த சந்திரசேகர் (52) கூறியது. ஒரு காலத்தில் களிமண்ணால் மட்டுமே சிலைகள் தயாரித்து வந்தோம். இப்போது போதிய அளவுக்கு களிமண் பொம்மைகள் தயாரிப்பில் ஈடுபட்டு உள்ளனர். அதேநேரம் 200க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் காதிதக்கூழ் பொம்மைகள் அதிக அளவில் செய்து வருகின்றனர். களிமண் சிலைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது.

அமெரிக்கா, ஜேர்மன், இத்தாலி போன்ற நாடுகளுக்கு ஏப்ரல், மே மாதங்களிலேயே கொலு பொம்மைகள் ஏற்றுமதியை முடித்துவிடுவோம். தைப்பூசத்தின் போது மலேசியாவுக்கு அதிக அளவில் பொம்மைகள் தயாரித்து அனுப்புவோம். இந்த நவராத்திரி திருவிழாவுக்கும் வழக்கம்போல் சிலைகள் விற்பனையாகி வருகின்றன. களிமண் பொம்மைகள் ரூ. 15 முதல் ரூ. 3 ஆயிரம் வரையிலும் காகிதக் கூழ் பொம்மைகள் இது போன்ற திருவிழாக்களால் எங்களைப் போன்ற ஏராளமான கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்றார் அவர்.

# நவராத்திரி விழா கொலுக் காட்சிகள்







ஸ்ரீ சற்குருபாதம் துணை

# நயினாதீவு முத்துக்குமாரசாமி

## வடிவேற்சுவாமிகள்

"நயினாதீவுச் சுவாமி" எனப் பலராலும் பாராட்டப்படும் பெரியார் பூரணத்துவ நிலையில் வாழ்ந்து தம் தூலதேகத்தை நீக்கி அமரத்துவமெய்தி சில ஆண்டுகளே கழிந்தன. இவர் ஓர் சிறந்த யோகியும் சீவன்முத்தநிலை எய்தியவருமாவர். இப்புனித யோகியின் உயர் நிலையை ஓர் சிலரே அறிந்திருந் தார்கள். ஆத்மீக உணர்வு குன்றிவரும் இந்நாட்களில் இத்தகைய உத்தமப் பெரி யார்களின் வரலாறுகளை நினைவு கூருவ தால் பலரும் பெரும்பயன் எய்துவர்.

இலங்கையின் வடபகுதியில் இருக்கும் நயினாதீவு ஏழுதீவுகளுக்கும் மத்தியில் நடு நாயகமாக விளங்குகிறது. இது தெய்வீகம் பொலிந்து விளங்கும் ஓர் புனித நிலையம். நாற்புறமும் கடல்சூழ்ந்து இயற்கை வனப்புகள் மிக்க ஓர் தீவு. இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் புனிதயாத்திரை ஸ்தலமாக விளங்குகிறது. பரதகண்டத்தில் அறுபத்து நான்கு சக்திபீடத்தில் இத்தலம் புவனேஸ்வரி பீடம் என வழங்கப்படுகிறது. ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்த தேவிமானச பூசையில் முதலாவது சுலோகத்தில் இதைக் குறிப்பிட்டிருக்கி றார்கள். இத்துணைச் சிறப்பும் பெருமையும் வாய்ந்த நயினாதீவில் வேளாண் மரபில் ஸ்ரீ முத்துக்குமாரு அவர்கள் அவதரித் தார்கள். இவருக்கு மூன்று மூத்த சகோ தரர்கள் இவருக்ககு மூன்று இளைய சகோதரர்களும் உண்டு. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்றதற்கமைய ஸ்ரீ முத்துக்குமாருவிடத்திலும் பின் ஓர் நிறை ஞானியாகக் கூடிய சிறந்த அம்சங்களெல் லாம் சிறு பருவத்திலேயே அரும்பத்தொடங்கி விட்டன. இவர் தேவி, கணேசன், முருகன் ஆகிய மூர்த்திகளில் அதிகபக்தியுடையவ ராகவிருந்தார். பாலப் பருவத்திலேயே பல அற்புதச் செயல்கள் செய்யத் தொடங்கி விட்டார். பத்துவயதுச் சிறுவனாயிருந்த நாளில் ஒருநாள் யாழ்ப்பாணத்திலிருந்து கரைப்பாதையால் (கரம்பன் புங்குடுதீவு மார்க்கமாகச் செல்லும் பாதை) தமது நயினாதீவுக்குப் போகும் மார்க்கத்தில் புங்குடுதீவில் உள்ள பனைமரங்களின் வனப்பிலும், ஏனைய இயற்கை வனப்பு களிலும் முத்துக்குமாரு மனத்தைப் பறி கொடுத்துவிட்டார். இதனால் தன் மடியில் வைத்திருந்த ஐந்து ரூபாய் தவறிக் கீழே விழுந்ததையும் இவர் அறியவில்லை. புங்குடுதீவுத் தோணித்துறைக்குச் சென்று மடியைப் பார்த்தார். பணத்தைக் காண வில்லை மனவருத்தத்தோடு தமது கணே சனை உள்ளத்தில் நினைந்து கொண்டு அங்கு நின்றார். அச்சமயத்தில் நயினாதீவுக் கணேசப்பெருமானுக்குப் பூசை செய்யும் ஐயர் அங்கு வந்து சேர்ந்தார். தோணியில் முத்துக்குமாருவையும் ஐயர் அழைத்துக் கொண்டு சென்றார். நயினாதீவுக் கரையில் இறங்கியதும் தாம் பணம் இழந்தமையும் கணேசன் தன்னைக் கஷ்டமின்றி இக்கரை சேர்த்தமையும் நினைந்துருகினார். உதித்தது ஓர் தெய்வீகப் பாடல். இதில் இவ்வருந் தவனின் அருட் புலமை பொங்கி வழிகிறது.

**"தச்சிச்சி பாடவும் தட்டாத்தி கூடத்தகவுடனே**
**இச்சித்து வேடிச்சிவந்தான் இருந்த இடைச்சியரோ**
**மச்சிக்கு நாணி மறைந்ததினால் மதிவாடவிடாது**
**இரட்சிக்க முன்னெதிர்வந்தான் கணேச முதல்வனுமே".**

*(தச்சிச்சி – சரஸ்வதி, தட்டாத்தி – பொய்மகள். வேடிச்சி – அருட்தாய், இடச்சியர் – இலட்சுமி)*

இதை ஓர் காகிதத்துண்டில் எழுதி ஐயர் வீட்டில் அவர் மனைவி கையில் கொடுத்துத் திரும்பி விட்டார். ஐயர் செய்யுளைக் கண்டு வியந்து ஸ்ரீ குமாரசாமியை ஓர் ஞானக்குழவி என வியந்து அவர்மேல் மிக்க மதிப்புக் கொண்டிருந்தார்.

இவர் பிரமச்சரிய ஒழுக்கத்தில் சிறிதும் வழுவாது வாழ்ந்துவந்தார். சிறுபருவத்திலேயே தாமாகச் சில சமயசாத்திரங்களைப் படித்து முடித்துவிட்டார். வாலிபப் பருவத்தில் இவரின் தமையனாருடன் கொச்சிக்கடையில் உள்ள அவரின் வியாபார நிலையத்தில் மனேச்சராகக் கடமையாற்றி வந்தார். அக்காலத்தில் தம்மிடம் வரும் அடியார்களை அன்போடு உபசரிப்பார். தனக்கு வஸ்து நிச்சயம் உண்டாக ஓர் குருவையடைய வேண்டுமென்ற பேரவாநாளுக்குநாள் வளர்ந்து வந்தது. அந்நாட்களில் கதிர்காம யாத்திரைக்குப் பலதரமும் போவதுண்டு. ஒருநாள் இந்தியாவில் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி பிறந்த இடமாகிய கடப்பை என்ற இடத்திலிருந்து ஓர் பெரியார் இவர் இருந்த கடைக்கு வந்தார். இவர் தம்மை ஆளவந்த சற்குரு என்பதை முத்துக்குமாரு அறியவில்லை. ஆயினும் வழக்கம்போல் அப்பெரியாரை வரவேற்று உபசரித்தார். பெரியார் இவருடன் சிலநாட்கள் தங்கியிருந்து முத்துக்குமாருவின் அழுக்குத் துணிகள் கழுவுதல் முதலிய குற்றேவல்களைச் செய்து வந்தார். இதைக்கண்டு மனம்பொறாதவராகி “சுவாமி! எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்” என்று கூறித் தடுப்பார். அதற்கு அப்பெரியார் “நான் செய்யாமல் இதை வேறு யார் செய்வது?” என்று சொல்வார். தன்னால் ஆட்கொள்ளப்பட வேண்டிய சீடனின் பக்குவ நிலையை ஆராயும் சற்குருவின் பரிசினை யார் தான் அறியவல்லார்! பன்னிரண்டு தினங்கள் கழிந்தன. கதிர்காமக் கதிரமலைக்கு இருவரும் சென்றார்கள். கதிரமலை செல்லும் நடுவழியில் ஓர் மரத்தடியில் (இரவு 8 மணி) தங்கும்படி பெரியார் கூறினார். இருவரும் அமர்ந்தனர். நிசப்தமான இடத்தில் நிசப்தமான வேளையில் ஸ்ரீ முத்துக்குமாருவுக்குத் தீக்கை வைத்து உபதேசாதிகளும் செய்தருளப்பட்டன. முத்துக்குமாரு முத்துக்குமாரு சுவாமி யானார். தனக்குக்குற்றேவல் புரிந்து – தானே வந்து தலையளித்தாட்கொண்ட சற்குவின் கருணையைக் கண்டு கண்ணீர் மல்க உடல் சிலிர்க்க விழுந்து விழுந்து நமஸ்கரித்துத் தோத்திரம் செய்து நின்றார். குருவும் சீடனும் அன்றிரவு அங்கு கழித்துக் கொண்டு அடுத்தநாட் காலை கதிர்காமச் சந்நிதி வந்தடைந்தார்கள். அங்கும் ஓர் தினம் தங்கிச் சுவாமிதரிசனம் முடித்துக் கொண்டு கொச்சிக்கடைக்குத் திரும்பி விட்டார்கள்.

முத்துக்குமாரசாமியார் இப்போ தம் குருநாதனுக்குப் பணியாளனாக வேண்டும் என்ற பேரவாவினால் உந்தப்பெறத் தமது கடமையையுங் கவனித்துக்கொண்டு கருமக் கட்டிலிருந்து விடுபடவே எண்ணிவரலானார். குருபக்தி மேலிட்ட முத்துக்குமாருசுவாமியவர்கள் தம் குருதேவரை நோக்கித் தம்மைவிட்டுப் பிரியாதிருக்குமாறு வேண்டினார். “வந்தவேலை முடிந்தது” என்று எண்ணிய மனத்தினராய் கடப்பைப் பெரியார் ஒருநாட் காலை ஆகாரம் ஆனதும் தாம் “கொழும்பில் சில அன்பர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்” என்று கூறிப் புறப்பட்டு விட்டார். மத்தியான உணவுக்கு வருவாரென எண்ணி எதிர்பார்த்திருந்த

முத்துக்குமாரசுவாமி அவர்கள் ஏமாந்தார். தேடிப்புறப்பட்டார். கொழும்பில் தேடுமிட மெல்லாம் தேடியும் அகப்படவில்லை. வாடிய மனத்தினராய் ஒரு மாசத்தின்பின் தன் தொழிலையும் விட்டு வெளியேறினார். இலங்கையில் உள்ள யாத்திரைத் தலங்கள் தோறும் பிறர்கண்ணுக்குப் பித்தர்போல் திரிந்து தன்னைத் தானறிந்த தற்பர நிலையில் நிரதிசய ஆனந்தத்தில் மூழ்கித் திரியலானார். இப்படித் திரிகின்ற தினங் களில் எவரும் இவரைச் சாது என்று நினைத்ததில்லை. பைத்தியம் பிடித்தவர் என்றே எண்ணலானார்கள்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கந்தப்பசேகரர் என்ற தனவந்தர் தமது இல்லத்திற்குச்சுவாமியவர்களை அழைத்துச் சென்று வேண்டிய உபசாரங் களைச் செய்துவரலானார்கள். சுவாமி களும் அவர்கள் வேண்டுதலுக்கிணங்கி அங்கு பலநாட்கள் தங்கிருக்கச் சம்மதித் தார். அந்நாட்களில் ஓர் ஆடி அமாவாசைத் தினத்தில் கீரிமலைக்குச் சென்று திரும்பி வரும்போது இணுவில் பரமானந்தவல்லி அம்மன் கோவிலையும், ஆச்சிரமத்தையுங் கேள்வியுற்று அங்குபோகத் திருவுளங் கொண்டார். தனியே நடந்துவரும் போது இணுவிலில் முன்னர் அறியாத ஒருவரை நோக்கி அவர் பெயரைக் கூறி அழைத்தார். அவர் வியப்புடன் சுவாமியண்டை சென்று வேண்டுவதென்ன? என்று வினவதாம் இணுவில் பரமானந்தவல்லி அம்மன் ஆலயத்துக்கும், ஆச்சிரமத்துக்கும் போக வேண்டும். அங்கு என்னைக் கூட்டிச்செல்ல வேண்டும் எனக் கேட்டார். அவ்வழிப் போக்கரான அன்பரும் சுவாமிகளை அழைத்துச் சென்று அவ்விடத்திற் சேர்த்து விடைபெற்றுச் சென்றார்.

பரமானந்தவல்லி ஆச்சிரமத்தில் இருந்த அடியாருக்கும் சுவாமிகளுக்கும் பரஸ்பர அன்புண்டாகிவிட்டது. சுவாமி அங்கு தங்கியிருந்த நாட்களில் அதிக காலமாகக் கபால இடியால் வேதனை யுற்றிருந்த ஓர் பெண்ணுக்கு இவர் தம் கரத்தால் தீண்டிப் பரிசித்ததும் அக்கபால இடி தீர்ந்து விட்டது. பின்பு மூளைக் கோளாறினால் அலைந்து திரிந்த ஒரு வரையும் அவ்வருத்தத்தினின்று சுக மடையச் செய்தார். இப்படிப் பலரின் நோயையும் தீர்த்து அருட்செயல் பல புரிந்தார் இந்த ஞானவள்ளல். இதன் பின் பல ஊரில் உள்ளவர்களும் வந்து தரிசித்து ஆசிபெற்றுச் செல்வராயினர். இதனால் இவருக்குப் பல தனவந்தர்களிடத்திலும் ஏனையோர்களிடத்திலும் செல்வாக்கு அதிகரித்தது. இணுவிலில் தங்கியிருந்த நாட்களில் அங்குப் பாழாயிருந்த ஓர் சிவாலயத்தைப் புதுப்பித்துக் கட்டி முடித்தார். இவ்வாலயத்தில் இப்போ மிகச் சிறப்புடன் நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வருகின்றன.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கருணை நோக்குற்ற அடிகள் வீடு தோறும் சென்று மக்களைத் தெய்வ வழிபாட்டில் ஈடுபடச் செய்வார். இதற்காக முருகன், கணேசன், நடேசர் ஆகிய மூர்த்திகளை வெள்ளியினால் செய்வித்துத் தமது பட்டுப்பபையில் வைத்துக்கொள்வார். வீடுகளுக்குச் சென்றதும் ஓர் இடத்தில் மேசையில் இத் திருமூர்த்திகளை வைத்து அபிஷேகம் செய்து மலர்களால் பூசை செய்வார். இதில் அனைவரையும் கலக்கச் செய்து தெய்வ வழிபாட்டின் அவசியத்தை வற்புறுத்துவார். சீவன் முத்த நிலையை எய்திய இச்சுவாமிகள் செய்து வரும் கிரியை

வழிபாட்டு முறைகளைக் கண்டு கண்டிக்கும் பலரும் இருந்தனர். அன்னவர்,

**தீராய்ப் பிரமவித்தாய்த் தெளிந்தவர் தெளியுமுன்னம்**
**வாரமாயிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ்சொன்ன**
**பாரகாரிய மானாலும் பலர்க் குபகாரமாக**
**நேரதாச் செய்வர் தீர்ந்தநிலைவிடாச் சீவன்முத்தர்.**

என்ற கைவல்லிய நவநீதச் செய்யுளை ஆராய்ந்து தம் மயக்கத்தைத் தெளிவாக்கு வார்களாக.

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபராகவிருந்த திரு. சண்முகரத்தினம் அவர்களுடன் அதிக தொடர்பு கொண்டிருந்தார். சுவாமிகள் அதிபருடன் இருக்கும் போது அவ்வாசிரிய கலாசாலை மாணவர்கள் இப்பெரியாரைக் கண்டு ஓர் சோற்றுச்சாமி என்று ஏழனமாகக் கூறியதுண்டு. இவரின் சமய அறிவையும் அனுபூதியையும் அவர்கள் அறியவில்லை. ஒருநாள் அம்மாணவர்கள் ஓர் திருவாசகத் துக்குப் பிழையாக அர்த்தம் செய்வதைப் பார்த்திருந்த சுவாமிகள் அதன் உண்மைக் கருத்தைத் தெளிவாகக் கூறியருளினார். ஆனால் மாணவர்கள் இவர்மேற் கொண்டி ருந்த அலட்சியத்தினால் இவர் கூறிய கருத்தைப் பொருட்படுத்தவில்லை. இவர் களின் உள்ளக்கருத்தினையறிந்த சுவாமிகள் பின்வரும் பாட்டினைப் பாடி ஓர் காகிதத்தில் எழுதி மாணவர் கையில் கொடுத்தார். அச் செய்யுளின் கருத்தை அறியமுடியாத மாணவர்கள் தாங்களே நேரில் சுவாமி களிடம் வந்து கருத்தை விளக்குமாறு வேண்டி நின்றனர். சுவாமிகள் அச் செய்யுளில் பஞ்சாட்சரம் அமைந்திருந்த கருத்தை விளக்கிக் கூறியதும் மாணவர்கள் தமது எண்ணத்தை மாற்றிச் சுவாமிகளி டத்தில் இருக்கும் கவித்துவ வன்மையையும் அருட்டன்மையையும் கண்டு பயபக்தியுடன் அவர் போதனைகளுக்கு அமைவாராயினர்.

**திருவுயர் பட்டினம் மாமலையுச்சி சிறந்தொருமீன்**
**வருமொரு வல்லித்தலை திருசூலவடிவம் அரன்**
**திருவுயர்கோலம் மகிழ்ந்துள்ளே யுணர்ந்து — தெளிந்தவர்க்கு**
**வருமருள் மாட்சியும் வானரசாட்சியும் வந்திடுமே.**

இவ்வுத்தம ஞானவள்ளலிடம் போதிய கவியாகும் திறமை இருந்ததற்கு அவரின் பாடல்களைக் கண்ணுற்றால் விளங்கும். அன்றியும் அவர் பாடல்களில் தேசபக்தி, தெய்வீகம் யாவும் பொலிந்து விளங்கு கின்றன. இவர் சென்ற தலங்கள் தோறும் பல பாடல்களைப் பாடியுள்ளார். முக்கிய மாக நயினாதீவு அம்மன் பேரில் அனேக பாடல்களைப் பாடியுள்ளார். மேலும் நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, இணுவில் காரைக்காட்டுச் சிவன் கோவில், நகுலேஸ்வரம், கும்பிவேற்கைப் பிள்ளையார் கோவில், மருதடி விநாயகர், மானிப்பாய் வேற்கைப் பிள்ளையார் கோவில், வண்ணை வைத்தீஸ்வரர் தையல்நாயகி அம்மன் கோவில், இணுவில் பரமானந்த வல்லி அம்மை கோவில், கந்தவனம் ஆகிய ஸ்தலங்கள் தோறும் சென்று அருமையான அருட்பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களை ஒன்று சேர்த்துப் பலர்க்கும் பயன்படுமாறு செய்வாரின்மையால் அவை பொதுமக்கள் கைக்குக் கிட்டவில்லை. அவற்றுள் நினைவிருக்கும் பாடல்கள் சிலவற்றை இங்கு தருகின்றோம்.

இணுவில் பரமானந்த வல்லி அம்மை பேரில் கும்பாபிஷேக தினத்தில் பாடிய அந்தாதி,

**பைந்தாதுமீது படிந்து மதுவுண்டு பாடுமளி**
**வந்தார்வமுற்று குலவுகா ஏரி வளவயல்சூழ்**
**நந்தா இணுவை ஞானந்தவல்லி நின்னாமமதில்**
**அந்தாதி பாடவருமே அரும்புக ழானந்தமே.** 1

**ஆனந்தவல்லி அகிலாண்ட நாயகி அம்பிகையே**
**மோனந்தரு முத்திவித்தே மயக்குமுனைப் பறுத்து**

ஈனந்தருவினை யெய்யா தொழித்து நமனணுகா
மோனம் மொழிகிளியே பரமானந்த நல்லொழியே.2
ஒளியே யொழியுள் ஒளியே யடியருளக்கமலத்
தவியே யருந்தியமர் கரும்பே அடியேனைத்தொடர்
பழியே யொழித்து பரமானந்த ஞானபரமசுகம்
மொழியே முடிவில் முதல்வாமியே யருள்முக் கண்ணியே. 3

காரைக்காட்டுச் சிவன் கோவிலுக்கு இவர் எழுந்தருளியபோது உள்ளம் பூரித்து "நாயன்மார்கள் பாடியதுபோல் நானும் பாடட்டுமா" என்று விளையாட்டாகக் கூறி 'நத்தார் புடை ஞானன்" என்ற தேவாரப் பண்ணில் (நட்டபாடை) பின்வரும் பாடலைப் பாடினார்.

எல்லாமுடை யெந்தாயேறேற் றுடையாய் செந்நெல் வயல்சூழ்
நல்லார் மலிகாரை வளநந்தா நடுமீதே
சொல்லால் முடிவாகா பலசோலை முகிலோங்க
எல்லாந்தரு இருந்தான் அடியெமையா ளுடை யானே.

அளவெட்டி நாகலிங்கம் ஓர் தனவந்தனும் அடியார் பக்தருமாவர். அவர் வீட்டிற்கு எமது சுவாமிகள் அடிக்கடி செல்வதுண்டு. அந்நாட்களில்தான் முதன் முதலாகக் கூப்பன் முறை ஆரம்பித்தது. இதை மனதில் எண்ணிய சுவாமிகளுக்கு உழவரின் உயர்வும் அன்னிய நாகரீகப் பிரியர்களின் போக்கும் நினைவு வந்தது. அப்போது பாடிய பாடல்கள்.

வாய்ப்பன் பனம்பழம் பிட்டுப்பினாட்டு இலைவள்ளியினம்
காய்க்கும்பலன் சிறுதானிய முண்ணக் கசப்புத்தகு
நோய்க்கும் பிறப்பிற வூருணவால் வரும்
நோய்(களு)க்கும் கூப்பனெக்குக்குருவா யளித்தனன்
கோவினமே 1

நாட்டுக்கும் வீட்டுக்கும் மாட்டுக்கும் தேசநலம் விரும்பும்
பாட்டுக்கும் நேரில் பகையாயிருக்கும் பறங்கியினச்
சேட்டுக்கும் தொப்பிசப்பாத்துகள் தேடு செருக்குளவர்
கோட்டுக்குள் நிற்பதைக் காட்டுவது கூப்பன் குரு மணியே.
2

இணுவை பரமானந்தவல்லி ஆச்சிர மத்தில் இருந்த அன்பர் இன்னொருவரின் தீமைக்கு அஞ்சி நித்திரையின்றி வருந்திக் கொண்டு இருந்தார். இரவு ஒரு மணிக்குச் சுவாமிகள் அங்கு வந்தார். வந்தவுடன் பின் வரும் வீரப் பாடலைப் பாடினார்கள். (நினைவிலிருக்கும் அடிகள் மாத்திரம் இங்கு தரப்படுகிறது)

பாவமே கொடிய அந்தகா சற்றும் பயமில்லா தென்னை விரட்டி
கோபமே புரியில் குருமணியிருக்கும் என் கோவணந்தானு
மஞ்சாது
நாகமேயாகி நீ சீறினாயாகில் நடிக்குது குருமணி மயூரம்.

நயினாதீவு புவனேஸ்வரி அம்மன் பேரில் பாடிய சந்தம் நிறைந்த திருப்பகழ் ஒன்று பின்வருமாறு இதில் மலிந்திருக்கும் வர்ணனைகளும், ஞானக்கருத்துக்களும் ஆராய்ந்து இன்புறற்பாலன.

நாரணி சரசுபரி பூரணி யுமாவுலக
காரணி மனோன்மணி கங்கபிராமி
வாரணி கலசமுலை மார்பணிபதக்கம் அராமாமணி
பிலாக்கு மூக்குத்தி மீன
கண்ணுதல் திலகமுதல் விண்மணிகள் நாணுமுயர்
ஞான வடிவான விழியருளுநல்
தார்முலை சுரந்தொழுகு பாலென விளங்குமதி
நேர்முக மிளமுறுவ லொளிகால
செந்துவர் வாய்யாழ் கிளிமொழிக் குரல்மௌன
நிலையாருமறியு மறிவிலமையாது
தார்புரள் சதுர்த்திருத்தோள் ஓர்கரம் வரம்தரும்மற்
றோர்கர மஞ்சாதீ ரென்றுலகாளும்
காவிகள்தொறும் கரும்பு மாபலாக் கதிலிநறும்
பூவினுத்தேனுண்டு கரும்பிசை பாடும்
காவியொடு செங்கழுநீர் வாவிகளில் நீர்பெருகி
கால்வழி சென்றூர் வயல்நெல் விளைவாகும்
கங்கைக்கரை யெங்கும் நுரைபொங்கு நயினாநகரில்
தங்கு புவனேஸ்வரி நம் தாயான
சாம்பவி சுமங்கலை பரகிருபானந்தி யிரு
தாள்தொழத் தரும் பரமானந்தந் தானே.

சுவாமிகளின் பின்காலத்தில் இந்தியத் தலங்களுக்குச் செல்லும் அவா உந்த ஒரு நாள் தன் உபாசனா தேவியான நயினாதீவு புவனேஸ்வரி அம்மனை வேண்டி அவ்வா லயத்தின் தென்பாகத்தில் நிற்கும் வேப்ப மரத்தின் கீழ் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அச்சமயம் அயற்கிராமத்தில் மூன்று வருட காலமாக வாய்பேச முடியாமல் இருந்த ஓர் பிராமணப் பெண் ஆவேசமாக ஓடிவந்து "மகனே உன்னை அயல்தேசத்திற்குச் செல்ல விடமாட்டேன்" என்று வாய்திறந்து அலறிக் கொண்டு அடிகள் முன்னிலையில் சாஷ்டாங்க மாக விழுந்தார். இதைக்கண்ணுற்ற சுவாமிகள் அன்னையின் குறிப்பறிந்து தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

இதன்பின் நயினையம்பதியில் திருக் குளம் திருத்திக்கட்டுவித்தும் திருவிழாக் காலங்களில் தண்ணீர்ப்பந்தல், அன்ன தானம் ஆகிய திருத்தொண்டுகளைப் பல அன்பர்களைக் கொண்டு செய்வித்தும்வர லானார். ஓர்நாள் மூலஸ்தானத்தில் சென்று தேவியைக் கட்டித்தழுவி அழுதார். இதைத் தடுத்த பூசகர்களுக்கு "தாயைத்தொடக் குழந்தைக்கு உரிமையில்லையா" என்று கூறித் தமது பக்திவைராக்கியத்தை வெளிப் படுத்தினார். இவ்வாலய இரதோற்சவம் நடைபெறும்போது அன்னையின் மடியில் தானும் இருக்க வேண்டுமென்று கூறித் தேரில் ஏறி, தேவியின் பக்கலில் அமர்ந்து கொள்வார்.

சுவாமிகள் மலர்மாலையில் அதிக விருப்புடையவராயிருந்தார். இதையறிந்த அன்பர்கள் இவரின் கழுத்தில் அழகான மலர்மாலைகளை அணிந்து வணங்கி ஆசிபெற்றுச் செல்வார்கள். விபூதியை அடிக்கடி தமது தேகத்தில் உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் தரித்துக் கொள்வார். இவர் தமது 22ஆவது வயதிலேயே சீவன் முத்தநிலை பொருந்தியிருந்தார் என்பதை அவரை உள்ளவாறு அறிந்தவர்கள் அறிவார்கள். இவரையறிந்த அன்பர்களும் அடியார்கள் தங்கள் தாய்போல எண்ணி இவருடன் பழகிவந்தனர் இவர்போல் ஓர் சாந்த சொரூபியைக் காண்பதரிது.

இவரின் உடல் வாழ்வின் அந்திய காலத்தில் வண்ணை கந்தப்பசேகரர் வீட்டில் தங்கியிருந்தார். பாண்டுரோகம் என்ற நோய் உடலைப் பீடித்தது. பன்னிரண்டு தினங்களாக வைத்தியம் செய்தனர். வைத்தியர்கள் இனி இதைச் சுகமாக்க முடியாதெனக் கூறினர். நோய்வாய்ப்பட்டி ருந்தபோதும் தம்மைத் தரிசிக்க வரும் அன்பர்களுக்குத் தமது ஆசியையும் அன்பையுமளித்து வந்தார். தம்மைச் சூழ்ந்திருந்த அன்பர்களுக்கு "ஆண்டவனை மறவாதிருங்கள்" என்று உபதேசித்து ஓர் மாசி மாதத்தில் மகாசமாதி எய்தினார். இப் புண்ணிய வள்ளலின் பூதவுடல் நயினாதீவு காட்டுக் கந்தசாமி கோவிலுக்கண்மையில் சமாதி வைக்கப்பட்டது. கந்தப்பசேகரரின் பேரர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சுவாமிகளைச் சமாதிவைத்த வைபவங்களில் முக்கிய பங்கு எடுத்து நிறைவேற்றிவைத்தார். சமாதியின் பக்கலில் கரம்பன் திரு. தம்பையா அவர்கள் ஓர் மடம் கட்டி, சமாதியையும் மடத்தையும் பராமரித்து வருகிறார்கள்.

தெய்வம் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்!

*ஓம் சாந்தி!!*

# நவராத்திரி மகத்துவம்

கலாநிதி பண்டிதர்
செல்வி. அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள்

**"உண்மை யென் றுணர்ந்தநெஞ்சில் ஓடி வந்து நிற்பவள்
நன்மை செய்ப வர்களுக்கு ஞான தீபம் ஆனவள்
மென்மை யான பண்பி னோடு மேவும் அன்புக் காவியம்
பன்மைஒன்றும் பாங்கில் வந்த பாரின் அன்னை வாழ்கவே..."**

அன்னையை வாழ்த்த அகில உலகமும் வாழும். அவளை ஏன் வாழ்த்துகிறோம். நாம் வாழ வேண்டும் என்பதற்காகவே வாழ்த்து கிறோம். அத்தகைய வாழ்த்துக்கும் வழி பாட்டுக்குமுரிய நாட்கள் இந்த நாட்கள். ஒன்பது இரவுகள் எமக்குத் தவப் பொழு தாகும். இரவையே பகலாகக் காணும் சிறப்பு பக்தர்களுக்கு உண்டு. திருவருளி னிடத்திலே எம்மை ஒப்புக் கொடுத்துத் தூங்காமல் தூங்கி நிற்கும் இரவுகள் நவராத்திரி நாட்கள். தேவி உபாசனை, மக்களை மகான்களாக்குகிறது. தரித்திரரைச் செல்வந்தராக்குகிறது. அமங்கலத்தை மங்கலமாக்குகிறது. மூடனை முழுஞானி யாக்குகிறது. ஆம் தேவி பராசக்தியே இவ்வாறு மொழிகிறாள். காண்பது, கேட்பது, மூச்செறிவது உண்மையில் யாவும் என்னுடைய ஆற்றலால் நிகழ்கின்றன. இந்தப் பிரபஞ்சம் தோன்றும்போது நான் காற்றாகி எப்பொருளிலும் ஊடுருவி நிற்கிறேன் என்பது தேவிசூக்தம்.

எமது சமயத்தை நோக்குமிடத்து விழாவின் தத்துவங்கள் யாவும் நன்மை, தீமைகளுக் கிடையில் நடைபெற்ற போராட்டமாகவே விளக்கம் தருகிறது. எப்போதும் எந்த இடத்திலும் இந்த போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இதனையே தேவாசுர யுத்தமாகப் புரா ணங்கள் வர்ணிக்கின்றன. இவ்வாறு ஒரு காலத்தில் நடைபெற்ற தேவாசுர யுத்தத்தில் தேவர்கள் வெற்றி கண்டனர். அதனால் இறுமாப்புக் கொண்டனர். இந்த இறுமாப்பை அடக்கியவள் அம்பிகை.

மகிடாசுரன் என்பவன் எருமைவடிவங் கொண்டவன். அஞ்ஞான வடிவமே எருமை. இவ்வடிவங் கொண்ட அசுரன் விரும்பிய போது தேவ, மானுட, மிருக வடிவங்களைப் பெறும் சக்தி பெற்றிருந்தான். அவனுக்கு ஒரு பெரிய அசுரப் பட்டாளம் கிடைத்தது. இப்பலங்கொண்டு தேவர்களை எதிர்த்தான். கடும்போர் புரிந்தும் வெற்றிகொள்ள முடியவில்லை. மரணபயமில்லாமல் உடனே போர்புரிய விருப்பினான். பிரம்மனிடம் சென்றான். மகிடன் தவம் புரிந்து நின்றான். ஆனால் பிரம்மனால் மரணமில்லாவரம் கொடுக்க முடியவில்லை. வேறு நிபந்தனை கேட்டான். உடனே பெண்ணால் அன்றி வேறெவராலும் மரணம் நேரக்கூடாது என்றான் மகிடன் அதே வரம் கிடைத்தது.

மகிடன் தேவர்களைக் கலக்கினான். துன்பத்தைத் தாங்க முடியாது இந்திரன் வியாழபகவானிடம் சென்றான். அவர் எல்லாம் உணர்ந்தவர். இது பராசக்தியின் லீலையென்பதைப் புரிந்துகொண்டார். பர தேவதையாகிய சக்தியை மறந்தால் அசுர சக்திகள் இவர்களுக்கு மேல் ஆதிக்கம் செலுத்துவதை உணர்ந்தார். இப்படி

அடிபட்டு நின்றால்தான் அம்மாவின் நினைவு இவர்களுக்கு வரும் என்பது தேவகுருவின் நினைவு.

உடனே இந்திரனைப் பார்த்துச் சொன்னார். இந்திரா இப்போதுதான் உனக்குத் தெய்வ நினைவு வரத் தொடங்கி யுள்ளது. பகைவனின் எழுச்சியில் பகவானின் நினைவு தோன்றும். அகங்காரம் போனால் அன்றி ஆனந்தம் ஏற்படாது. யுத்தத்தையே தொடர்ந்து செய்து உன்னுடைய கர்ம வினையைக் கலைத்து விடு. மகிஷனிடம் சரணாகதி அடையாதே. தெய்வ சகா யத்தை நாடினால் எல்லாம் வெற்றிகிட்டும் என்று கூறிய வியாழபகவான் இந்திரனை யும் அழைத்துக் கொண்டு பிரம்மனிடம் சென்றார். பின்பு பிரம்மனோடு சேர்ந்து வைகுந்தம் சென்றனர். ஆனால் நாரா யணன் போரிலே ஊக்கத்தைக் கொடுத்து இந்திரனுக்கு உற்சாகம் ஊட்டினார். இந்த நிலையில் மகிஷனிடம் இந்திராதி தேவர்கள் போர் புரிய முன்வந்தனர். ஆனால் மாயப் போரினால் தேவர்களுடைய பார்வைக்கு எந்தப்பக்கமும் மகுடாசுரன் காட்சி கொடுத் தான். இந்நிலையில் ஸ்ரீமத் நாராயணன் சக்கரத்தை சுழற்ற மகுடனின் மாயரூபம் மறைந்தது. ஆனால் அவன் சிம்ம வடிவம் எடுத்துக்கொண்டான். உடனே நாராயணன் அவ்விடத்தை விட்டு நீங்க மகுடன் பழைய வடிவத்தை எடுத்தான். இந்திரன் கலங்கித் தன்னுடைய யானையாகிய ஐராவதமும் திகைத்து நிற்க அங்கிருந்து மறைந்து ஓடிவிட்டான். தேவலோகமே அசுரலோகம் ஆகிவிட்டது. இந்திரன் அரியாசனத்தில் மகுடாசுரன் அமர்ந்தான். பராசக்தி ஆகிய பரதேவதை தர்மக்கோல் வழுவாமல் இக்காட்சியை நடாத்திக் கொண்டிருந்தாள். மீண்டும் தேவர்கள் பிரம்மனிடம் தஞ்சம் புகுந்து மகுடனுக்குக் கொடுத்த வரம் மிகத் தப்பானது என்பதை உணரவைத்தார்கள். ஆனால் பிரம்ம தேவர் மகுடனின் முடிவைப் பற்றியும் அது ஒரு பெண்ணால் ஏற்படும் என்றும் கூறியவுடனே தேவர்கள் கயிலைக்குச் சென்று பரமேசனை வணங்கி நின்றார்கள். அப்பொழுது இறைவன் பிரம்மனைக் கண்டித்து மகுடாசுரனுக்கு வரம் கொடுத்தது முற்றிலும் தவறு என்பதை உணர்த்திவிட்டார். அதுவுமன்றி நாரா யணனிடமே ஆலோசனை கேட்கும்படி அனுப்பிவிட்டார். உடனே நாராயணனைக் கண்டு தமது அவலத்தைத் தேவர்கள் முறையிட்டனர். நாராயணனோ அந்த மகா சக்திகளின் லீலைகளை நினைத்துப் பார்த்து தேவர்களை நோக்கி அந்தப் பராசக்தியைத் தியானிக்க வேண்டும் என்று வழி காட்டினார். எல்லோரும் தியானத்தில் ஈடுபட்டனர். ஏன் சிவனும் நாராயணனுமே தியானம் செய்து நிற்க பேரொளி அவ்விரு வரது முகங்களிலிருந்து தோன்றியது. அற்புதமான புஜபல பராக்கிரமங் கொண்ட தாய்மையின் உரு கற்பனைக்கும் எட்டாத சௌந்தரியப் பிரகாசத்தை வெளிக்காட்டிக் கொண்டு காட்சியளித்தது. அம்மா வந்து விட்டாள். மகிடன் மடிந்தான் என்று தேவர்கள் ஆனந்தமடைந்தனர். பரமேஸ்வரன் சூலாயுதத்தை அம்பாளுக்கு அளித்தார். நாராயணன் ஒரு சக்கரத்தைக் காணிக்கை யாகக் கொடுத்தார். இமவான் சிங்க வாகனத்தைக் கொடுத்தான். சிம்மா னேஸ்வரி என்ற பெயர் இவள் ஒருத்திக்குத் தானே உண்டு. அஞ்ஞான வடிவமான மகிடனை வதைக்க ஞானாம்பிகை தோன்றினாள். மகிடன் அடங்கினான். அவனையே நல்லுணர்வு கொடுத்து வாகனமாகவும் ஏற்றுக்கொண்டாள். மகிடாசுரனை வதைத்த அட்டமி, நவமி

தினங்களை சாக்தர்கள் நவராத்திரியில் மிகப் புண்ணிய காலமாகக் கருதுகின்றனர். துர்க்கை, மகாலட்சுமி அட்டமி நவமி கூடும் வேளையில் மகிடவதம் செய்வதால் இவ்விரு திதிகளும் விசேடம் பெற்றன. மகிடவதத்தின் பின் தேவர்கள் உடனேயே அம்பிகையின் ஆக்ஞையை முன்னிட்டுத் தமது ஆயுதங்களை அவள் அடியில் வைத்துப் பூசித்தார்கள். அடுத்த தினமாகிய விஜயதசமி என்பது தேவி தனது அவதார காரியம் முடிந்தபின் உருக்கரந்த தினமாகும். தான் மறைந்ததாக அவர்கள் வருந்தா வண்ணம் தன் நினைவை அவர்களுக்கு வெகு அழுத்தமாகத் தந்து தேவருலகில் அவர்கள் வெற்றி விழாக் கொண்டாடுமாறு இந்த ஜகந்மாதா அருளிய தினம் விஜயதசமி விஜயம் என்றால் வெற்றி. பொதுவாகப் பெரியோரது வருகையை விஜயம் என்கிறோம். ஆனால் அம்பிகையின் போக்கிலே (திரும்புதல்) இவ்விழா எடுக்கப்படுகிறது. அவள் அசுரரை மட்டும் வெல்லவில்லை. தேவர்களின் இறுமாப்பையும் வென்றாள். இவ்வெற்றியின் காரணமாக அவளுக்கு சண்டி, சண்டிகா என்ற நாமங்களுண்டு. அதாவது தீவிரமாகத் துளும்பும் மூர்த்தி அவளே. இவளே துர்க்காதேவி துர்க்கதியிலிருந்து எம்மை மீட்பவள் இவளே. எனவே இத்தேவியை அர்க்கியம், அலங்காரம், சுகந்தம், சந்தனம், மலர், அட்சதை, தூபம், தீபம் ஆகியவற்றால் பூசிப்பாயாக என ஞானிகள் வழி காட்டியுள்ளனர். இவ்வாறு சின்மயமான தேவியுடன் வழிபாட்டினால் தன்மயமாகி விட வேண்டும். மகுடாசுரனின் பிடரியில் தன் னடிகளை ஊன்றிநிற்கும் எழில்மிகு வடிவத்தையே துர்க்காதேவியின் எழில் விக்கிரமாகக் காண்கிறோம். மர்த்தனம் என்பது அரைப்பது. அதாவது கெட்டியான தன்மை கரைகிறது. மகிடன் அடங்கினான் என்பதும் இதுவே நம் திருக்கோயிலில் சங்கு சக்கர தாரணியாக விஸ்ணுசக்தியாக அம்பாள் விளங்குகிறாள். ஞானபராசக்தி அன்பில் ஆனந்த ரூபிணியாக சிம்மத்தில் இருந்து துதிகளைச் செவிமடுத்து அருள் புரிந்தாள் என்பது நவராத்திரி விழாவின் பயனாகும். நவராத்திரி தினங்களில் இத்துதியை மேற்கொண்டு விரத அனுட்டான சீலர்களாக வாழ்ந்து எமது அஞ்ஞானத்தை நசித்து மெய்ஞானத்தைப் பெருக்கிக் கொள்வோமாக.

கலை, இலக்கியப் படைப்புகள் அழகுள்ளவை. சாதாரண யதார்த்த வாழ்க்கையிலும் பார்க்க, கலையும் இலக்கியமும் பிரதி பலிக்கும் வாழ்க்கை, ஒருயர்ந்த படியிற் செறிந்த அழகுடன் இருக்கலாம்; இருக்கவும் வேண்டும். கலையுமிலக்கியமுஞ் சித்தரிக்கும் வாழ்க்கை மிகத் தெளிவாகவும், எடுத்துக் காட்டாகவும் அமைகிறபடியால், இலட்சியத்திற்குச் சமீபமாக அமைந்து உலகப் பொதுமையைக் காட்டுகின்றது.

**- மா - சே - துங்**

# இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு

## பன்னாலை வித்துவான் சிவானந்தையர் 1873 – 1916

யாழ். தெல்லிப்பழைக்கு அருகாமையில் உள்ள பன்னாலையில் சபாபதி ஐயர் அவர்களது அருந்தவப் புதல்வராக 1873 வரையிற் பிறந்தவர் சிவானந்தையர். பிள்ளைக்கு ஐந்து வயதானதும் சபாபதி ஐயர் தானே வித்தியாரம்பம் செய்து வைத்து அவ்வூர் ஆசிரியர் ஒருவரிடம் ஆரம்பக் கல்வி பெற ஒழுங்கு செய்தார். கல்வியில் அவர் திறமையை அவதானித்த தந்தையார் அவருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்க விரும்பிச் சி.வை.தாமோதரம்பிள்ளை ஏழாலையில் ஆரம்பித்து சுன்னாகம் குமாரசாமிப் புலவர் தலைமையில் இயங்க வைத்த பாடசாலைக்குப் பிள்ளையை அழைத்துச் சென்று சேர்விற்கு அனுமதி பெற்றார். மாணவனின் தரத்தைப் பரிசீலணை செய்த புலவர், அவர் நுண்ணறிவை அவதானித்து மேல் வகுப்பிற் சேர்த்துக் கொண்டார். அத்துடன் சமஸ்கிருத மொழி வகுப்பிலும் அவரைப் பங்குகொள்ள வைத்தார். தாம் சுகவீனமாக இருந்த வேளையிலும் அவரை வீட்டுக்கு வருமாறு அழைத்துப் பாடம் சொல்லிக் கொடுத்தார். அந்த அளவிற்கு அந்தப் பிள்ளையிடம் பற்றுக் கொண்டிருந்தார். புலவரிடம் பல வருடங்கள் கற்ற சிவானந்தையர் கவி பாடுவதிலும் வல்லமை உடையவரானார்.

பின்னர் இந்தியா சென்றவர் அங்கு வியாகரண பண்டிதர்களிடம் கலந்துரையாடி வடமொழி நூல்களில் தமக்கிருந்த ஐயப்பாடுகளைப் போக்கிக் கொண்டார். திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று அங்கிருந்த புலவர்களுடன் கலந்துரையாடியதன் மூலம் அவர்களால் கௌரவிக்கப் பட்டார். வடமொழி நூல்களில் இவருக்கிருந்த ஆற்றலை அவதானித்த ஆதீனத்தார் இவருக்கு வித்துவான் பட்டம் கொடுத்துக் கௌரவித்தனர் என்றும் சொல்வர். அந்தச் சமஸ்தான அதிபதியிடம் சன்மானமும் பெற்றுள்ளார் என்றுந் தெரிகிறது.

அப்பால் சிதம்பரஞ் சென்று பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியர் நியமனம் பெற்றுப் பல ஆண்டுகள் அங்கு பணி புரிந்துள்ளார். அந்த வேளை சாஸ்திரியார் ஒருவரிடமும் சமஸ்கிருத தருக்க நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். அவைகளிற் சிலவற்றை மொழிபெயர்த்தமைத்தார். அந்தவேளை அங்கிருந்த யாழ்ப்பாணத்தவரான தருக்க குடார தாலுாரி எனப் போற்றப்பட்ட – திருஞான சம்பந்தபிள்ளை என்பவரின் உதவியையும் பெற்றுக் கொண்டார். நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், அதனுரையாகிய நீலகண்டீயம், என்னும் வடமொழி நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டன. அந்தக் காலத்திலேயே புலியூரந்தாதி என்னும் நூலும் இவராற் செய்யப்பட்டது.

இவரை இல்வாழ்க்கையிற் புகுத்த விரும்பிய தந்தை யாழ்ப்பாணம் வந்து போகும்படி திருமுகம் அனுப்பினார்.

தந்தையின் பணிப்பை ஏற்று வந்தவருக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்டது. அந்தத் தம்பதியினருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை வளர்ந்து பருவமடைந்தபோது அவர் மருகன் முறையினரான பண்டிதர் ப.இரத்தினேஸ்வர சர்மாவிற்கு மனைவியாக்கப்பட்டார்.

தெல்லிப்பழையிலிருந்து சட்டநூல் அறிஞர் தம்பையாபிள்ளை என்னும் ஒருவரையே சிவானந்தையர் நண்ப ராகக் கொண்டிருந்தார். ஆங்கிலமொழி, தமிழ் என்பவற்றில் வல்லவரான தம்பையா சைவசித்தாந்த ஞானமும் பெற்றிருந்தார். சிதம்பரத்திலிருந்து மீண்டுவந்தபின் தம்பையா பிள்ளையைச் சந்திக்கும்போ தெல்லாம் சிதம்பரத்தில் தான் கண்ட நடராச தரிசனம் பற்றிப் பலவாறாக விரித்துரைப்பார். தாம் பாடிய புலியூரந் தாதி பற்றிய செய்திகளையும் சொல்லுவார். கேட்டுக்கேட்டு ஆனந்தித்த தம்பையா பிள்ளை, குறிப்பிட்ட கருத்துக்கள் புலனாகும் வகை புலியூர் புராணம் ஒன்று பாடும்படி வேண்டினார். நண்பரின் விருப்பை நிறைவு செய்யும் வகையிற் பாடப்பட்டது தான் புலியூர்ப் புராணம் என்பர். நூலொன்றுக்கு நூறு கவிதை களுக்கு மேல் பாடக்கூடிய வல்லமை பெற்றிருந்த வித்துவான் சனி, துதி என்றொரு நூலும் செய்துள்ளார். திருக்குறள், முதற் பத்து அதிகாரங்களுக்குப் புத்துரை ஒன்றையும் இயற்றியுள்ளார் என்று தெரிகிறது. தசகாரியம் எனப்பெரிய நூலொன்றும் இவரால் பரிசோதித்து வெளியிடப்பட்டதென்றும் சொல்வர். இவர் செய்த பல நூல்கள் அச்சில் வெளிவரவில்லையென்றும் தெரிகிறது.

ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் உடையன இவர் பாடல்கள். மிகுந்த ஞாபகசக்தியுடைய இவருக்குத் திருமுறைப் பாடல்களில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவற்றுள்ளும் திருவிசைப்பா பாடல்களில் மிகுந்த ஈடுபாடுடையவர். அவர் பாடிய புலியூர்ப் புராணச் செய்யுளொன்று பார்ப்போம்.

**ஆம்பல் பற்பல வொருகையிற் பற்றின ரழிப்பார்**
**தேம்பப் புண்டரீ கம்பல வொருகையிற் சிதைப்பார்**
**சாம்பு மெல்லியர் மகளிரென் றுரைப்பது சழக்கோ**
**நாம்பு கன்றது பொய்யுரை படுங்கொலோ நவிற்றீர்.**

சனிதுதி என்னும் நூலிலிருந்து ஒரு பாடல்.

**கருநிலம் படைத்தாய் போற்றி**
**காளமுண் டிருண்ட கண்டத்**
**தொருவனே நிகர்ப்பாய் போற்றி**
**யுகைன் றுலர்ந்த யாக்கைத்**
**திருமலி செல்வ போற்றி**
**செறிசடைக் கற்றை யோடு**
**வருமுகத் துரோமந் தாங்கி**
**மன்னிய தெய்வம் போற்றி**

இவர் 1916 நள வருடம் மார்கழி மாதம் மூன்றாம் தேதி தம் நாற்பத்து மூன்றாவது வயதில் இயற்கை எய்தினார்.

## சிறுவர் விருந்து

# பகவான் பார்த்தருள்வான்

**சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

அன்பான பிள்ளைகளே!

அன்பு வணக்கம் :-

இறைவன் தன் அடியார்க்குப் பணி செய்ய முன்வருவான் என்பதைப் பிட்டுக்கு மண்சுமந்த கதை மூலம் அறிந்திருப்பீர்கள் இதோ! வட இந்தியாவில் நடந்த ஒரு சம்பவம் வாசித்துப் பாருங்களேன்.

முன்னொரு காலத்திலே வட இந்தியாவில் சூர்தாஸர் என்றொரு மகான் இருந்தார். பகவான் கிருஷ்ணனைப் பாடிப்பரவுவதையே கடமையாகக் கொண்டவர் அவருக்கு இரு கண்களிலும் பார்வை கிடையாது. ஆனால் அக் கண்ணால் பண்டரி புரத்தில் இருக்கும் கிருஷ்ணனைக் கண்டு மெய்யுருகிப் பாடுவார். தனிமையில் அவர் இருந்து பாடும்போது கிருஷ்ணன் சிறு குழந்தை வடிவில் அவர் மடியில் அமர்ந்திருந்து அப்பாடலை கேட்டு இரசிப்பதுண்டாம். ஆனால் சூர்தாஸர் தம்மடிமீது யாரோ ஒரு குழந்தை இருப்பதாக நினைத்து மெய்மறந்து பாடுவதை பக்திக் கண் கொண்ட சில பெரியோர்கள் கண்டு மகிழ்வர்.

இந்த அற்புதச் செய்தியை அக்காலத்தில் மராட்டிய அரசை நிறுவி ஆண்டு வந்த சிவாஜி மகாராஜா கேட்டு அறிந்தார். சூர்தாஸரின் பாடலை அருகில் இருந்து கேட்க அவரும் ஆசைப்பட்டார். ஒருநாள் மாறுவேடம் பூண்டு சூர்தாஸர் இருக்கும் இடத்திற்கு இரகசியமாக வந்த சிவாஜி மகாராஜா சூர்தாஸர் அருகில் தரையில் அமர்ந்து பாடல்களைக் கேட்டுத் தன்னை மறந்து இருந்தார். இடைவிடாது அவரைக் கண்காணிக்கும் மொகலாய ஒற்றன் ஒருவன் இந்த நிகழ்ச்சியை அறிந்து விட்டான். அவன் தனது அரசர் நவாப்பிற்கு இதை அறிவித்தான். வெல்ல முடியாத எதிரியான சிவாஜியைப் பிடிக்கச் சந்தர்ப்பம் பார்த்திருந்த நவாப் நன்கு திட்டமிட்டு தன் படைகளில் சிறந்த ஒரு பிரிவைப் பயிற்சி கொடுத்து அனுப்பினான். அவர்களும் சிலர் நாராயண பக்தர் போலவும், சிலர் நாடோடிகள் போலவும் வேடமிட்டு சூர்தாஸர் பாடும் இடத்தில் கண் காணிக்கத் தொடங்கினர்.

சிவாஜி மகாராஜா மற்றொருநாள் மாறுவேடத்தில் சூர்தாஸரிடம் வந்தார். பாடலில் லயித்து ஒரு ஓரத்தில் தன்னை மறந்து நின்றார். அந்த வேளையில் நவாப்பின் படைகள் சிவாஜியைச் சுற்றி வளைத்தன.

நுண்ணறிவுமிக்க சிவாஜி சாதுரியமாக அங்கிருந்து வெளியேறி தன் குதிரையில் ஏறித் தப்பிச் செல்ல முனைந்தார். ஆனால் நவாப்பின் படைகள் மிக நெருங்கி வந்து விட்டன. சிவாஜி தன் இஷ்ட தெய்வமான பவானி தேவியை மனத்தால் பிரார்த்தித்தார். அதே வேளை இரண்டு இளம் வீரர்கள் தலைமையில் எங்கிருந்தோ வந்து முளைத்த ஒரு சிறு வீரர்கள் படை சிவாஜிக்கு மிக நெருக்கமாக வந்து அவருக்குப் பாதுகாவல் தந்தபடி மொகலாயப் படையுடன் வீரத்துடன் போரிட்டன. இரண்டு படைகளிடையே போர் உக்கிரமான வேளையில் புதிய படையின் தலைவன் சிவாஜி தப்பிச் செல்ல வழி செய்து கொடுத்ததுடன் அவர் அருகிலேயே வந்து நீண்ட தூரம் மெய்க்காவலனாகச் செயல்பட்டான்.

அப்பாடா! சிவாஜி தன் கோட்டைக்குள் புகுந்து அரண்மனையை அடைந்து விட்டார். மொகலாயப்படையை ஓட ஓட விரட்டி அடித்த புதிய படை தன் இரு தலைவர்களுடன் மாயமாக மறைந்து விட்டது.

ஆம்! ஸ்ரீ கிருஷ்ணன் தன் அடியவனின் பாடலை விரும்பிக் கேட்கவந்த வீரசிவாஜிக்குப் பாதுகாப்பு அளித்துக் காப்பாற்றி விட்டார். இந்த அரிய நிகழ்வினை பாண்டுரங்கன் என்ற பெயர் பெற்ற பகவான் கிருஷ்ணனின் மெய்யடியார்கள் நேரில் கண்டு வியந்து கண்ணீர் மல்கி வணங்கினார்கள்.

கண்ணனும் பலராமனுமே படைத் தலைவராய் வந்து தன் பக்தன் சூர்தாஸரனின் பாட்டுக்கு உருகிய சிவாஜியைப் பாதுகாத்தார்கள் என்ற உண்மையை அறிந்து மேலும் பக்தியில் ஈடுபட்டார்கள.

---

உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக் கொடுத்துத் தேர்வு வைப்பதில்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.

**- சுவாமி விவேகானந்தர்**

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**துர்க்காதேவியின் தென்திசை வாயில் இராஜகோபுரம்**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தென்திசை வாயில் இராஜகோபுரத்திருப்பணி எதிர்வரும் தைமாதத்தில் ஆரம்பமாகவுள்ளது. பல வருடங்களுக்கு முன் கோவிலில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் மீண்டும் கொண்டு வந்து தெற்கு வாசலில் போடப்பட்ட அற்புதத்தை பலரும் அறிவர். அற்புதம் நிறைந்த தெற்கு வாசலில் அழகிய இராஜகோபுரம் அமையத் திருவருள் கைகூடியுள்ளது.

**உரும்பிராய் கற்பக விநாயகர் கோவிலில் புதிய அன்னதான மண்டபம்.**

உரும்பிராய் கற்பக விநாயகர் கோவிலில் புதிய 101 அடி நீளமான நவீன வசதிகள் கொண்ட அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது. ஆவணிச் சதுர்த்தி அன்று செஞ்சொற் செல்வர் அடிக்கல் நாட்டி திருப்பணி வேலையை ஆரம்பித்து வைத்தார்.

**கடையிற் சுவாமிகள் குருபூசை**

ஈழத்து சித்தர் பாரம்பரியத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல அற்புதங்கள் செய்து மக்களை ஆற்றுப்படுத்திய கடையிற் சுவாமிகளின் 124வது குருபூசை 27.09.2015 அன்று நீராவியடி கடையிற் சுவாமிகள் கோவிலிலும் மண்டைதீவு கடையிற் சுவாமிகள் நினைவுக் கொட்டிலிலும் சிறப்பாக நடைபெற்றது. அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டதுடன் சுவாமியின் திருவுருவ விக்கிரகம் வீதி வலம் வந்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 125 ஆவது ஆண்டு விழா**

வட இலங்கையில் முதலில் தோன்றிய சைவக் கல்லூரியாகிய யாழ் இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழா இம்மாதம்25,26,27 திகதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு மலர் வெளியிடப்பட்டதுடன் குருதிக்கொடை நிகழ்வும் நடைபெற்றது. பல பழைய மாணவர்கள் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தனர்.

**உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நூற்றாண்டு விழா**

இம்மாதம்27,28,29 திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது. உரும்பிராயில் அமைந்த இப்பாடசாலை சைவ மக்களின் வரலாற்றுப் பாடசாலையாகத் திகழ்கிறது.

**உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் மகோற்சவம்**

சரித்திரப் பிரசித்தி பெற்ற கல்வெட்டுடைய இக்கோவில் மன்மத வருட மகோற்சவம் புரட்டாதி மாதம் சிறப்பாக நடைபெற்றது. பிரதம குருவாக மலேசியா ஸ்கொட் றோட் முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.

சபா. பரமேஸ்வரக் குருக்கள் கலந்து சிறப்பித்தார்.

**செல்லப்பா சுவாமிகள் 100வது குருபூசை சிறப்பு மலர் வெளியீடு**

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 100வது குருபூசைச் சிறப்பு மலர் நல்லூர் கந்தனின் தீர்த்தத் திருவிழா அன்று சிறப்பாக நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. செஞ்சொற் செல்வரின் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதல் பிரதி சின்மய மிசன் முதல்வர் ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகளுக்கு வழங்கப்பெற்றது. செல்லப்பா சுவாமிகள் சமாதி ஆலய பரிபாலகர் திரு. கனகரட்ணம் சகோதரர்கள் இந்நூலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

**பிரபல சித்த ஆயுர்வேத வைத்தியர் சுதுமலை ஹோ மகேஸ்வரன் காலமானார்.**

சுதுமலையில் பாரம்பரிய வைத்திய மரபில் பிறந்த இவர் வடக்கு கிழக்கு மாகாண சித்த வைத்தியத்துறைப் பணிப்பாளராக உயர் பதவி வகித்தவர். மூலிகைச் செடி வளர்ப்பில் மிகுந்த அக்கறையுடைய இவர் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக முன்பு விளங்கியவர்.

**பிரபல வயலின் வித்துவான் இசைஞானத் திலகம் உ. இராதாகிருஷ்ணன் காலமானார்.**

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட புகழ்பூத்த வயலின் வித்துவான் திரு. உருத்திராபதி இராதாகிருஷ்ணன் அவர்கள் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற இசை அரங்கில் தனது கச்சேரியை நடாத்திக் கொண்டிருந்த வேளை திடீர் சுகவீன முற்றார். யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு காலமனார்.

**சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் பண்ணிசை வகுப்பு**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஓதுவார் திரு. குமாரசாமி இராமச்சந்திரன் அவர்களால் நல்லூர் சின்மய மிசன் மண்டபத்தில் நடாத்தப்பட்டு வருகிறது. கிளிநொச்சியிலும் மகாதேவா ஆச்சிரமத்தில் வகுப்புகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு விழா**

யாழ் இந்துக் கல்லூரி நிர்வாகத்தால் சைவப்பிள்ளைகளின் ஆரம்பக் கல்விக்காக கல்லூரி மைதான வளவில் நூறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று தனியான நிலத்தில் பிரமாண்டமான கட்டிடங்களுடன் பெரு வளர்ச்சி கண்டுள்ளது. இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா ஒக்டோபர் மாதம் இறுதி வாரத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

**சைவப்புலவர் சங்கத்தின் பட்டமளிப்பு விழா**

இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா இம்மாதம் கீரிமலை சிவபூமி மடத்தில் நடைபெறவுள்ளது. சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்கள் தலைமை யில் இவ்விழா நடைபெறவுள்ளது.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை நடாத்தும் முதலாவது அனைத்துலகச் சைவமாநாடு 2015**

2015 கார்த்திகை 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கருப் பொருள் "சிவாகமங்களும் திருமுறை களும் புலப்படுத்தும் சைவப்பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனை களும் என்ற விடயம் தொடர்பாக நடைபெறவுள்ளது.


**நல்லூரில் பாரதி விழா**


யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம் நடாத்தும் பாரதி விழா நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் பேராசிரியர் தி. வேல்நம்பி தலைமையில் 11/10/2015 மாலை நடைபெறவுள்ளது.


**துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாசபைத் தலைவருக்கு வரவேற்பு**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பரம்பரைத் தர்ம கர்த்தா சபையின் தலைவர் கௌரவ திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதை கௌரவித்து தேவஸ்தான நிர்வாக சபையினால் கௌரவிக்கப்பட்டார்.


அவுஸ்ரேலியா அபயகரம் நிறுவனம் எமது துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின்
வளர்ச்சிக்கு கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாகப் பேருதவி வழங்கி வருகிறது.
அபயகரம் நிறுவனத்தின் ஸ்தாபகர் உயர்திரு.க. சிவானந்தன் தம்பதிகள்
வருகைதந்தபோது அவர்களுக்கு வரவேற்பு விழா நடைபெற்றது.















Print Master. T.P. 021-205 3322